Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 12, 2021

திங்கள்கிழமை ஜூலை 12, 2021 | ஒளி: 07 கதிர் 45 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

சாவக்கச்சேரி உறுப்பினர் சடலமாக மீட்பு

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினரான சிவகுமார் கஜேன் (வயது 28), நேற்று (11) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

‘மாகாண எல்லைகளை இருதரப்பினர் கடக்கலாம்’

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள், எதிர்வரும் 24ஆம் திகதிவரையிலும் நீடிக்கப்பட்டுள்ளன. எனினும், மாகாண எல்லைகளைக் கடந்து செல்வதற்கு இரண்டு தரப்பினர்களுக்கு மட்டுமே அனுமதியளிக்கப்படும் எனபொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

‘கோட்டாபய முகாமுக்கு காணிகள் அபகரிப்பு’

போராட்டம் வெடிக்குமென ரவிகரன் எச்சரிக்கை

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட வட்டுவாகல் கிராமத்தில் 617 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை, அங்கிருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ கடற்படை முகாமுக்காக அபகரிக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்துள்ள வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரான துரைராசா ரவிகரன்,

தொடர்ச்சி P2

வைத்தியர் ஆடைமாற்றுவதை படமெடுத்த வைத்தியர் கைது

பெண் வைத்தியரொருவர் தனது தங்கும் விடுதியில் ஆடைமாற்றும் போது புகைப்படங்களை எடுத்ததாகக் கூறப்படும் ஆண் வைத்தியரை, ராகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

7.1 மில்லியன் சினோ.:பார்ம் நாட்டுக்குள் வந்தடைந்தன

சீனாவில் தயாரிக்கப்படும் கொரோனா தடுப்பூசி மருந்தான சினோஃபார்ம் தடுப்பு மருந்துகள், 7.1 மில்லியன் இதுவரையிலும் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. அவற்றில், 11 இலட்சம் தடுப்பு மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

15 வயதான சிறுமி விவகாரம்:

எம்.பிக்கு வலை; சிக்கிய வங்கி முகாமையாளருக்கு விளக்கமறியல்



இணையத்தளத்தின் ஊடாக பாலியல் செயற்பாடுகளுக்காக, 15 வயதான சிறுமியொருவர் விற்பனை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

தொடர்ச்சி P2

ஜனாதிபதியை சந்திப்பதற்கு

காத்திருக்கிறது ‘கை’

21 ஆம் திகதியன்று சந்திக்கும் சாத்தியம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்காக, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி காத்துக்கொண்டிருப்பதாக அக்கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

“தற்போதைய அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளில் முக்கியமான ஒரு கட்சியாக ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியே உள்ளது. இந்நிலையில், அரசாங்கத்துடன் செயற்படுவது தொடர்பில் நடைமுறை ரீதியான சில பிரச்சினைகள் காணப்படுகின்றன” என்றார்.

தொடர்ச்சி P2

பருத்தித்துறை

உ ஆம் குறுக்கு தெரு முடக்கப்பட்டது

என்.ராஜ்

பருத்தித்துறை - இரண்டாம் குறுக்கு தெரு பகுதி, நேற்று (11) காலை 6 மணி முதல் முடக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

மட்டக்களப்பு மாவட்டத்தில்

‘6 சிவப்பு வலயங்கள்’

கனகராசா சரவணன்

கொரோனா வைரஸ் தொற்றால், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே ஆகக் கூடுதலாக 100 மரணங்கள்பதிவாகியுள்ளன எனத் தெரிவித்த மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன், மாவட்டத்தின் 6 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் சிவப்பு வலயங்களாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன என்றார்.

தொடர்ச்சி P2

‘நன்றியுடன் இருக்கவேண்டும்’

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவர் 65 இலட்சம் வாக்குகளைப் பெற வேண்டும். ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ 69 இலட்சம் வாக்குகளைப் பெற்றார் எனத் தெரிவித்த பத்திக் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, இங்கு 4 இலட்ச வாக்குகள் வித்தியாசம் ஏற்பட்டமைக்கு, ஏதாவதொரு வகையில் எமது உதவிகளும் காரணமாக இருந்துள்ளன. அதற்காகவாவது அந்த பெரமுன எமக்கான கௌரவத்தை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

கங்கையில் மூழ்கி

தாத்தாவும் இரண்டு பேரன்களும் மரணம்

கொஸ்கொட பிரதேசத்தில் கங்கையில் மூழ்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள், காலி - கொஸ்கொட, துவே மோதர கங்கையில் நேற்று முன்தினம் மாலை நீச்சல் பழகிய போது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

‘இருப்பவர்கள் இருக்கலாம்’

சேஹன் செனவிரத்ன

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இருக்க முடியுமாயின் இருக்கலாம். இல்லையாயின் பெரமுனவை விட்டுச் செல்லவும் முடியுமென தெரிவித்த போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, நாம் போகச் சொல்லவும் மாட்டோம். இருக்கச் சொல்லவும் மாட்டோம். இவர்கள் சென்றுவிட்டால் அரசாங்கத்துக்கு எவ்வித பிரச்சினையும் ஏற்படாது என்பதை உறுதியாகக் கூறுகின்றேன் என்றார்.

கண்டியில் நேற்று முன்தினம் (10) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சட்டமூலத்துக்கு எதிராக

கொரோனா தனிமைப்படுத்தல் நிலையத்துக்குள் போராட்டம்

சண்முகம் தவசீலன், செ.கீதாஞ்சன்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டமூலத்தை உடனடியாக கிழித்தெறியுமாறு கோரி, கொரோனா சிகிச்சை மத்திய நிலையத்துக்குள்ளே போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

சு.கவுக்கு மேலும் மூன்று அமைச்சுகள் கிடைக்கும்?

வீரவன்ச, கம்மன்பிலவுக்கு சிக்கல்

அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் வசமிருக்கும் அமைச்சுகளில் சிலவற்றை அவ்விருவரிடமிருந்தும் அபகரிப்பதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாக அறியமுடிகின்றது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

‘மாகாண எல்லைகளை இருதரப்பினர் கடக்கலாம்’

“மருத்துவக் காரணங்கள் மற்றும் நெருங்கிய உறவினர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வதற்காக மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்படும்”

எனினும், ஜூலை 10ஆம் திகதி வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல் அறிக்கைக்கு அமைய மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துத் தடை, ஜூலை 24ஆம் திகதிவரையிலும் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்தன, ஜூலை 10ஆம் திகதியன்று வெளியிட்ட புதிய சுற்றுநிரூபமொன்றின் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், மூடப்பட்டிருந்த வணக்கத்தலங்களை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருமண நிகழ்வுகளை நடத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. திருமண மண்டபத்தில் 25 சதவீத எண்ணிக்கையிலானோருடன் அல்லது அதிகபட்சமாக 150 பேருடன் திருமணங்களை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், பொதுக் கூட்டங்களை 50 பேருடன் நடத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று இல்லாத திடீரென ஏற்படும் மரணங்களின், மரண சடங்கில் 50 பேர் கலந்துகொள்ளலாம். ஆனால், அந்தச் சடலத்தை 24 மணிநேரத்துக்குள் அடக்கம் செய்யப்படவேண்டும். இதேவேளை, சினிமா, அருங்காட்சியகம் 50 சதவீதமான இட ஒதுக்கீடுடன் திறப்பதற்கு அனுமதியிக்கப்பட்டுள்ளது. அங்கெல்லாம் ஏற்கெனவே, அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்கள் கடுமையாக பின்பற்றப்படவேண்டும் எனவும் அந்த சுற்றுநிரூபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

‘கோட்டாபய முகாமுக்கு காணிகள் அபகரிப்பு’

தமிழ் மக்களின் காணிகள் அவ்வாறு அபகரிக்கப்படுமாயின், மக்களோடு இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இறங்குவோம் என எச்சரித்தார்.

முல்லைத்தீவு பிரதேச நில அளவைத் திணைக்களத்தின் அரச நில அளவையாளர் பா.நவஜீவன், 08.07.2021 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றின் மூலமாக, காணிகளை மீண்டும் அளவீடுசெய்து கடற்படைக்கு வழங்க இருப்பதாக காணிகளுக்குரிய தமிழ் மக்களுக்கு அறிவித்தல் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

“முள்ளிவாய்க்கால் கிழக்கு, வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள தமிழ் மக்களுக்குரிய 617 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை 2017, 2018ஆம் ஆண்டுகளில் அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக, 2017இல் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டிருந்தது” என்றார்.

இருப்பினும், அப்போது இந்த அபகரிப்பு முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, காணிகளுக்குரிய தமிழ் மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தனர் என நினைவூட்டிய அவர், அதனால், அப்போது அந்த ஆக்கிரமிப்பு முயற்சிகள் கைவிடப்பட்டிருந்தன என்றார்.

நிலஅளவை செய்வதற்காக 2021.07.29 ஆம் திகதி காலை 9 மணிக்கு வருகைதந்து தங்கள் காணிகளின் எல்லைகளையும் விவரங்களையும் இனங்காட்டும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள் எனக் குறித்த கடித்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தங்களின் காணியை உறுதிப்படுத்தும் ஆவணத்தையும் ஆவணத்தின் பிரதி ஒன்றையும் எடுத்துவரும்படியும், குறித்த கடிதத்தின் மூலம் காணி உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ கடற்படை முகாம் அமைந்துள்ள தமிழ் மக்களின் காணிகளை அளவீடுசெய்து சட்டரீதியாக ஆக்கிரமிப்புச் செய்யும் முயற்சிகளை உரியவர்கள் கைவிடவேண்டும் எனத் தெரிவித்த ரவிகரன், அந்தக் கடற்படை முகாம் அங்கிருந்து அகற்றப்படவேண்டும் என வலியுறுத்தினார்.

“இவற்றுக்கு மாறாக காணி ஆக்கிரமிப்பு முயற்சிகள் தொடர்ந்தால், எமது மண் மீட்புப் போராட்டங்களும் தொடரும்” என்றார்.

முல்லைத்தீவு - கரைத்துறைபற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வட்டுவாகல் மற்றும் முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதிகளிலுள்ள 271.6249 ஹெக்டேயர் விஸ்தீரனமுடைய காணிகள், காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அரசாங்கம் எடுத்துக்கொள்ள இருப்பதாக 2017ஆண்டு ஓகஸ்ட் மாதம் 04ஆம் திகதியன்று வெளியான 2030/44ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் அறிவிப்பொன்று வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சாவக்கச்சேரி உறுப்பினர் சடலமாக மீட்பு

இவர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கீழ் போட்டியிட்டு, சாவகச்சேரி பிரதேச சபைக்கு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டவர் ஆவார்.

மரமொன்றில் தொங்கிக்கொண்டிருந்த நிலையிலேயே அவருடைய சடலம் மீட்கப்பட்டுள்ளது. இது கொலையா? அல்லது தற்கொலையா? என்பது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக சாவக்கச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

எம்.பிக்கு வலை; சிக்கிய முன்னாள் வங்கி முகாமையாளர்...

நேற்றுவரையிலும் கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 37ஆக அதிகரித்துள்ளது. வங்கியொன்றின் முன்னாள் முகாமையாளரும் பொலிஸ் அதிகாரியொருவரும் நேற்றையதினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அச்சிறுமியைக் கொள்வனவு செய்து, பாலியல் தேவைக்காகப் பயன்படுத்திக்கொண்டார் என்றக் குற்றச்சாட்டு தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரையும் கைது செய்வதற்கு வலைகள் விரிக்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், சிறுமிகள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட 5,000க்கும் அதிகமானவர்களை பாலியல் செயற்பாடுகளுக்காக விற்பனை செய்வதற்கு இணையத்தளங்களின் ஊடாக, விளம்பரம் செய்யப்பட்டுள்ளது என்பது விசாரணைகளின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட வங்கியின் முன்னாள் முகாமையாளர் மற்றும் பொலிஸ் அதிகாரி ஆகிய இருவரும் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே, நீதவான் பிரியந்த லியனகே அவ்விருவரையும், ஜூலை 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்

வைத்தியர் ஆடைமாற்றுவதை படமெடுத்த வைத்தியர் கைது

குறித்த பெண் வைத்தியர், இரவு 8.45 மணியளவில் தனது தங்கும் விடுதியில் ஆடை மாற்றிக் கொண்டிருந்தபோது புகைப்படங்களை எடுத்ததாகக் கூறப்படும் வைத்தியரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், ராகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புத்திக ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

காத்திருக்கிறது ‘கை’

இந்த விடயங்கள் தொடர்பாக இறுதியாக நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இதில் கட்சியின் மத்தியக்குழு உறுப்பினர்கள் பல்வேறு நிலைப்பாடுகளைத் தெரிவித்தனர் எனத் தெரிவித்த அவர், அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டுமென சிலர் கூறினார்கள். எனினும், தற்போது நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு உடனடியாக எவ்விதமான முடிவுகளும் எடுப்பது தவிர்க்கப்பட்டுள்ளது” என்றார்.

“நடைமுறைசார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காக முதற்கட்டமாக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் ஜனாதிபதியுடன் பேசுவதற்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கே காத்திருக்கின்றோம்” என்றார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சின்னம், “கை” என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான குழுவினருக்கும், முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தலைமையிலான பிரநிதிகள் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு, எதிர்வரும் 21ஆம் திகதியன்று இடம்பெறவுள்ளதென தகவல்கள் தெரிவிக்கின்றன.

‘இருப்பவர்கள் இருக்கலாம்’

தொடர்ந்து தெரிவித்த அவர்,

“ஐக்கிய தேசியக் கட்சியுடன் தேசிய அரசாங்கமாக செயற்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிகாக உழைத்தமையால், அவர்களை பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுனவுடன் இணைந்துப் போட்டியிட வாய்ப்பை வழங்கினோம்” என்றார்.

பொதுத் தேர்தலில் சுதந்திரக் தனியாக போட்டியிட்டிருந்தால் 2 ஆசனங்களைக் கூட பெற்றிருக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்காது. எனவே, அவர்கள் ஜனாதிபதித் தேர்தலுக்கு எமக்காக செயற்பட்டமையை மதிப்பதாகத் தெரிவித்த அவர், அதற்கான கௌரவங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றார்.

அரசாங்கத்துக்கு எதிராகவோ, அமைச்சர்களுக்கு எதிராகவோ நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவார்களாயின் அது கொண்டு வந்த பின்னரே, அரசாங்கத்துக்கு இருக்கும் பலத்தை பார்த்துக்கொள்ள முடியுமென தெரிவித்த அவர், நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்க முடியும். ஆனால், வெற்றிபெற முடியாது. எமது அரசாங்கத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை உள்ளது என்றார்.

7.1 மில்லியன் சினோ.:பார்ம் நாட்டுக்குள் வந்தடைந்தன

இரண்டு மில்லியன் தடுப்பு மருந்துகள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்றையதினம் (ஜூலை 11) வந்தடைந்தன.

மார்ச்- 31ஆம் திகதியன்று 6 இலட்சம், மார்ச் 31ஆம் திகதியன்று 5 இலட்சம் தடுப்பு மருந்துகள் சீனா அரசாங்கத்தால் நன் கொடையாக வழங்கப்பட்டன.

ஜூன் 6, ஜூன் 9, ஆம் திகதிகளில் தலா ஒரு மில்லியன் சினோஃபார்ம் தடுப்பு மருந்துகளும், ஜூலை 2, ஜூலை 4ஆம் திகதிகளில் தலா ஒரு மில்லியன் சினோஃபார்ம் தடுப்பு மருந்துகளும் கொள்வனவு செய்யப்பட்டன நேற்று (ஜூலை 12ஆம் திகதியன்று) இரண்டு மில்லியன் சினோஃபார்ம் தடுப்பு மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என இலங்கைக்கான சீன தூதரகம் அறிவித்துள்ளது.

2ஆம் குறுக்கு தெரு முடக்கப்பட்டது

அந்தப் பகுதியில், எழுமாறாக 60 பேரிடம் நேற்று முன்தினம் (10) முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில், 23 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறிப்பட்டது.

இதையடுத்து, பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியால், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கு, இப்பகுதியை தனிமைப்படுத்துமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கைக்கமைய, பருத்தித்துறை - இரண்டாம் குறுக்குத் தெருவில் 53 குடும்பங்களை உள்ளடக்கிய பகுதி, நேற்று (11) காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டது.

கொரோனா தனிமைப்படுத்தல் நிலையத்துக்குள் போராட்டம்

கேப்பாப்புலவு விமானப்படை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்ட தேரர்கள் இருவர் மற்றும் இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்களால், போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்துக்கு எதிராக, பாராளுமன்ற சுற்றுவட்டத்துக்கு அண்மையில், கடந்த வியாழக்கிழமை (08) ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை ஆசிரியர் சங்க தலைவர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 33 பேர் கைது செய்யப்படடு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டவர்களில், தேரர்கள் இருவர் மற்றும் இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 11 பேர் கேப்பாப்புலவு தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படு த்தப்பட்டுள்ளனர்.

‘கொத்தலாவ சட்டத்தை உடன் கிழித்தெறி’ என்று தமிழில் சிங்களமொழில் எழுதப்பட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு, தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து போராட்டத்தை, சனிக்கிழமை (10) முதல் முன்னெடுத்துள்ளனர்.

6 சிவப்பு வலயங்கள்

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இன்று (11) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“மட்டக்களப்பு, காத்தான்குடி, ஏறாவூர், கோறளைப்பற்று மத்தி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி ஆகிய 6 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் தொடர்ந்தும் சிவப்பு வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன” என்றார்.

அத்துடன், மாவட்டத்தில் இதுவரை 7,199 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனா 3ஆவது அலையில் 6,214 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதுன், 91 பேர் மரணித்துள்ளனர்.

கொரோனா சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளில் இருந்து 4,995 பேர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். வைத்தியசாலைகளில் 1,060 பேர் தங்கியிருந்து தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

மாவட்டத்தில், கரடியனாறு, வாகரை, நாவற்காடு, பெரியகல்லாறு போன்ற வைத்தியசாலைகள் கொரோனா இடைத்தங்கல் முகாம்களாக அமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், காத்தான்குடி, வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி ஆகிய வைத்தியசாலைகள் சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளாக மாற்றப்பட்டு சிகிச்சையளிக்கபட்டு வருவதுடன், மாவட்டத்தில் 700 நோயாளர்களைப் பராமரிக்க கூடிய கட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக வழங்கப்பட்ட 3 ஆயிரம் தடுப்பூசிகள் சுகாதார துறையினருக்கு ஏற்றப்பட்டன. தொடர்ந்து இரண்டாம் கட்டமாக கிடைக்கப்பெற்ற 25 ஆயிரம் தடுப்பூசிகள், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் ஏனைவர்களுக்கும் ஏற்றப்பட்டன.

3ஆவது கட்டமாக தற்போது 50 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதுவரையில் 30 ஆயிரத்து 176 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன எனத் தெரிவித்த அவர், மாகாண சுகாதார திணைக்களத்தினாலும் நன்கொடைகளாலும் ஒட்சிஜன் சிலிண்டர்கள் கிடைக்கப் பெற்றதையடுத்து தேவையான அளவு ஒட்சிஜன் இருப்பில் இருக்கின்றது என்றார்.

‘நன்றியுடன் இருக்கவேண்டும்’

“கண்டி மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்பு எவ்வாறு இருந்தது என்பதை எவ்வித கௌரவக் குறைவும் இல்லாமல், புள்ளிவிவரத்தை எடுத்துப் பார்த்தால் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவுக்கு அது புரியும்” என்றார்.

குருநாகலில் நேற்று (11) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது ஒத்துழைப்புக் கிடைத்திருக்காவிட்டால், 50 ஆயிரம் வாக்குகளால் கண்டியில் தோல்வியைத் தழுவியிருப்பர். எனவே, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அவர்களுடன் இணைந்திருந்தமையால்தான், 4 இலட்சம் மேலதிக வாக்குகளால் ஜனாதிபதி வெற்றி பெற்றார் என்றார்.

“ஸ்ரீ லங்கா பெதுஜன பெரமுன ஆளுமையும் செய்கிறது. அரசியலையும் செய்கிறது. ஆனால், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்கு ஆளுகையும் இல்லை. அரசியலும் இல்லை” என்றார்.

தாத்தாவும் இரண்டு பேரன்களும் மரணம்

இதன்போது, ஒரே குடும்பத்தை சேர்ந்த தாத்தா மற்றும் அவரின் பேரன்களான 6 வயதுடைய இரட்டைக் குழந்தைகள் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர்களின் சடலங்கள் கடற்படையின் சுழியோடிகளால் மீட்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சு.கவுக்கு மேலும் மூன்று அமைச்சுகள் கிடைக்கும்?

அவ்விருவரிடமிருந்தும் மாற்றப்படும் அமைச்சின் விடயதானங்களுக்கு அமைய, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு மேலும் 3 அமைச்சுகளை வழங்குவதற்கு ஆலோசித்து வருவதாகவும் அறியமுடிகின்றது.

நிதியமைச்சராக பெசில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டதன் பின்னர், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களை விரைவுப்படுத்தி, இலக்கை எட்டிக்கொள்வதற்கு புதிய அமைச்சரவை மாற்றமொன்றை மேற்கொள்வதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறியமுடிகின்றது.

அதனடிப்படையில், ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன கூட்டணியின் கீழான ஒப்பந்தங்களின் அடிப்படையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு வழங்கப்படவேண்டிய அமைச்சுப் பதவிகளை, அக்கட்சிக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் நிமிர்த்தமே அமைச்சர்களான உதயகம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோரிடமிருக்கும் அமைச்சுகளின் விடயதானங்களை பகிர்வதற்கு அரசாங்கம் கலந்தாலோசிப்பதாக அறியமுடிகின்றது.

இந்நிலையில், அரசாங்கத்தால் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கும் அமைச்சுகளை பொறுப்பேற்றுக்கொள்வதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் தீர்மானித்துள்ளதாக அறியமுடிகின்றது.

இதேவேளை, புதிய அமைச்சவை மாற்றத்தில், சுகாதாரம், பொலிஸ், தொழில் மற்றும் கல்வி ஆகிய அமைச்சுக்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

எசல பெரஹரவில் பிரதமர் பங்கேற்பு

வரலாற்றுச் சிறப்புமிக்க ருஹுணு மஹா கதிர்காமத்தின் எசல பெரஹர சனிக்கிழமை இரவு நடைபெற்றது. இதில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ சகிதம் கலந்துகொண்டார்.

எசல பெரஹரவின் பிரதான நிகழ்வாக வருடாந்தம் நடைபெறும் தனித்துவமான பாரம்பரியங்கள் மற்றும் சடங்குகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்படும்.

எனினும், கொரோனா தொற்று நிலைமை காரணமாக இம்முறை எசல பெரஹர சுகாதார வழிகாட்டல்களுக்கமைய, பொதுமக்களின் பங்கேற்பின்றி ஏற்பாடு செய்யப்பட்டது.

பெரஹரவில் ருஹுணு மாகம் பத்துவே பிரதான சங்கநாயக்கர் கிரிவெஹர ரஜ மஹா விகாராதிபதி கலாநிதி வணக்கத்துக்குரிய கொபவக தம்மிந்த தேரர் மற்றும் ருஹுணு மாகம்பத்துவே பிரதான நீதிமன்ற சங்கநாயக்கர் கபுகம சரணதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட மஹா சங்கத்தினர் பங்கேற்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, ருஹுணு மஹா கதிர்காமத்தின் பஸ்நாயக்க நிலமே டிஷான் விக்ரமரத்ன குணசேகர, கதிர்காம பிரதேச சபைத் தலைவர் சானக அமில் ரங்கன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

அரசியலில் பெண்கள் இணைவதற்கான

‘சூழலை ஏற்படுத்தவும்’

பரிந்துரைகளை முன்வைக்கவுள்ளது பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியம்

நாட்டின் சகல தேர்தல் சட்டங்களும் ஒரு தேர்தல் நடத்தை விதியின் கீழ் ஒருங்கிணைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியம், திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கும் நியமிக்கப்பட்ட விசேட பாராளுமன்ற குழுவில் பரிந்துரைகளை வழங்க முன்வந்துள்ளது.

பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தின் தலைவர் இராஜாங்க அமைச்சர் வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்ணான்டோ புள்ளே தலைமையில் அண்மையில் கூடியபோதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இலங்கையில் சகல தேர்தல்களுக்கும் ஒருமித்த தேர்தல் முறையை அறிமுகப்படுத்தவும், உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபைகள் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின் போது பெண்களின் பிரதிநிதித்துவத்தை ஒரு குறிப்பிட்ட அளவைப் பேணுவதற்கான யோசனையை விசேட பாராளுமன்றக் குழுவில் முன்வைப்பதற்கும் இணக்கம் தெரிவித்தனர்.

நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட குழுவில் சமர்ப்பிக்க எதிர்பார்த்திருக்கும் யோசனைகளில், தேர்தல்களின் போது குறிப்பாகப் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான விசேடமான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தல், அரசியல் கட்சிகளின் கட்டமைப்பில் பெண்களுக்கு குறிப்பிட்ட கோட்டாவைப் பேணுவதைக்

கட்டாயமாக கடைப்பிடிப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் மற்றும் இதன் ஊடாக பெண்கள், அரசியலில் இணைவதற்கான சூழலை ஏற்படுத்தல் என்பன அடங்குகின்றன.

மேலும், இதற்கு மேலதிகமாக தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களால் தேர்தல் பிரசாரங்களுக்கு செலவுகளை மேற்கொள்ளும்போது, சகலருக்கும் சமமான வாய்ப்பு கிடைப்பதை உறுதிப்படுத்தல், இவ்வகையில் கட்டுப்பாட்டை உருவாக்குதல் மற்றும் பொறுப்புக் கூறும் நிலைமைய ஏற்படுத்தல், பாராளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் பெண்களுக்கு ஆகக் குறைந்தது 30சதவீதம் வரை வேட்புமனுக்களை அதிகரித்தல் மற்றும் அனைத்துக் கட்சிகளினதும் தேசியப் பட்டியல்களில் பெண்களுக்கு 50 சத வீதத்தை உறுதிப்படுத்துவது போன்ற விடயங்களையும் பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் விசேட குழுவுக்கு முன்மொழியவுள்ளனர்.

கொரோனா வைரஸின்

‘நான்காவது அலையை உருவாக்காதீர்கள்’

அரசியல்வாதிகளிடம் நாமல் வேண்டுகோள்

திட்டமிட்ட முறையில் நாட்டைத் திறந்துகொண்டிருக்கின்ற இக்கால கட்டத்தில், கொரோனா வைரஸின் நான்காவது அலையை உருவாக்குவதை அரசியல்வாதிகள் தவிர்த்துக் கொள்ளவேண்டுமென அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுகாதார அதிகாரிகள் முன்வைத்துள்ள தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுபவர்கள், சட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்க முடியாது எனவும் ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அனைத்து அரசியல்வாதிகளும் முன்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றவேண்டியது பொதுமக்கள் பிரதிநிதிகளின் கடமை என வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய நிலவரம் காரணமாக பொதுமக்கள் பெரும் சுமையை சுமக்கின்றனர் என தெரிவித்துள்ள அவர், நாடு திறக்கப்படும் வரை அரசியல்வாதிகள் பொறுமையாக இருக்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

‘லைவன்ட் மக்களுக்கு தீர்வை வழங்குவேன்’

செந்தில் தொண்டமான் உறுதி

அருள்ஷான்

யட்டியாந்தோட்டை-லெவன்ட் தோட்டத்தில் மண்சரிவு எச்சரிக்கைக் காரணமாக, தற்காலிக கூடாரங்களில் வாழும் மக்களை, நேற்று (11) நேரில் சென்று சந்தித்த பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், மண்சரிவால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள லயன் குடியிருப்புகளையும் பார்வையிட்டார்.

அத்துடன், தற்காலிகக் கூடாரங்களில் தங்கியுள்ள மக்களுடன் கலந்துரையாடிய அவர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு, காணி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், தோட்டக் கம்பனிகள், தனி இராஜ்ஜியம் நடத்துவது போல் மக்களை வழிநடத்துவதாகவும், இனிமேல் இவ்வாறு வழிநடத்தாமல் இருக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்த அவர், தோட்ட நிர்வாகத்தால் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள லெவன்ட் தோட்ட மக்களுக்காக தொழில் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கதிர்காம பெரஹரா...

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் கந்தன் கோவிலின் வருடாந்த ஆடிவேல் விழா, கொடியேற்றத்துடன் சனிக்கிழமை (10) ஆரம்பமானது. முதலாவது நாளுக்குரிய பெரஹரா, மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன், சுகாதாரமுறைப்படி நடைபெற்றது.

(படங்கள் : சகா)

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில்

‘புதிய திருத்தச் சட்டம் வந்துள்ளது’

க. அகரன்

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக பாராளுமன்றத்தில் புதிய சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்திலுள்ள நகரசபை மற்றும் பிரதேச சபைகளின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனுக்கும் இடையிலான சந்திப்பொன்று, வவுனியாவில், நேற்று முன்தினம் (10) நடைபெற்றது.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், வன்னி மாவட்டத்தில், பொருளாதார, அரசியல் சமூகப் பிரச்சினைகளைக் கட்சி ரீதியான பிரிவினைகளைக் கொண்டு பார்த்தால், மக்களுக்கு நன்மை செய்ய முடியாமல் போகும் என்றார்.

இதேவேளை, கைதிகள் தொடர்பில் தான் எடுத்த முயற்சிகள் காரணமாக, 16 கைதிகளை அண்மையில் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவித்த அவர், அதன் பணி மேலும் தொடருமென்றும் ஜனவரி மாதத்துக்குள் இன்னுமொரு தொகுதி கைதிகளை விடுதலை செய்வதற்குத் தயாராக இருக்கிறோமெனவும் கூறினார்.

அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக பாராளுமன்றத்தில் புதிய சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளாகத் தெரிவித்த அவர், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நிலையம் முழுமையாக இயங்கும் வகையில் தடைகளை நீக்கியிருக்கின்றோம் எனவும் கூறினார்.

சம்மாந்துறையில்

பாகிஸ்தான் அதிகாரியுடன் தவிசாளர் சந்திப்பு

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் காரியாலயத்தின் கல்வி, அரசியல், கலாசார செயலாளர் ஆயிஷா அபூபக்கர் பஹத் நேற்று சம்மாந்துறைக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

இவ்விஜயத்தின் போது சம்மாந்துறை பிரதேச சபைத் தவிசாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாட்டை பிரதேச சபை அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் கிழக்கு மாகாண தகவல் தொழில்நுட்ப பேரவையின் தவிசாளரும், தென்கிழக்குப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினருமான கலாநிதி அன்வர் எம்.முஸ்தபாவும் கலந்துகொண்டார்.

சப்பாத்துப் பாலம் புனரமைக்கப்படுமா?

ரஸீன் ரஸ்மீன்

புத்தளம், எலுவங்குளம் ஊடாக மன்னார் செல்லும் பிரதான வீதியில் உள்ள சப்பாத்து பாலத்தை புனரமைத்து, பொதுமக்களின் போக்குவரத்துக்காக உடனடியாக திறப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.எச்.எம்.நியாஸ் கோரிக்கை விடுத்தார்.

பொதுமக்கள் தொடர்ச்சியாக முன்வைத்த கோரிக்கைகளுக்கு அமைய, வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.எச்.எம்.நியாஸ், முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் இணைப்புச் செயலாளர் இர்ஷாத் ரஹ்மதுல்லாஹ் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் குழு, புத்தளம் பழைய எலுவங்குளம் பகுதிக்கு சனிக்கிழமை கள விஜயம் மேற்கொண்டு குறித்த சப்பாத்து பாலத்தைப் பார்வையிட்டனர்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர்,

“2010ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதியும், தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில், புத்தளம் எலுவங்குளம் ஊடாக மன்னார் செல்லும் வீதி பொதுமக்கள் போக்குவரத்துக்காக திறந்துவிடப்பட்டது.

“இந்த நிலையில், புத்தளம், பழைய எலுவங்குளம் பகுதியிலுள்ள இந்தச் சப்பாத்து பாலம் கடந்த ஒன்றரை வருடங்களாக பழுதடைந்து காணப்படுவதுடன், பொதுமக்கள் போக்குவரத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

“எனவே, இப்பாலத்தை அவசரமாக புனரமைத்து, புத்தளம் - மரிச்சுக்கட்டி பிரதான வீதியையும் மக்கள் போக்குவரத்துக்காக திறப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கிறேன்” என்றார்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அற்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுகொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு.
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srockwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினரும்

இணையவழி கற்பித்தலில் இருந்து விலகினர்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கமும் உடனடியாக இணையவழிக் கற்பித்தலில் இருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக, அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் சிவக்கொழுந்து ஜெயராஜா, நேற்று (11) அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிப்பட்டுள்ளதாவது, "நாட்டின் சுகாதாரப் பாதுகாப்புக்கருதிக் கொண்டுவரப்பட்ட தனிமைப்படுத்தல் சட்டமானது, இன்று அரச எதிர்ப்புத் தொழிற்சங்க முன்னெடுப்புக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவது



தொழிற்சங்க நடவடிக்கைக்கு எதிரான, உரிமை மீறலும் கண்டனத்துக்குரியதுமாகும்.

"இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட 31 தொழிற் சங்கப் பிரதிநிதிகள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் எந்தவிதக் காரணமும் இன்றித் தனிமைப்படுத்தல் சட்டத்தின்கீழ், முல்லைத்தீவில் தனிமைப்படுத்தியமை அரச அடக்குமுறையின் உச்சக்கட்டமாகவே கருத முடியும்.

"அரச வைத்தியர்களின் இரு நாள்களுக்கு மட்டும் மேற்கொள்ளப்பட்ட பணிப்பகிஸ்கரிப்பிற்காக அவர்களின் 07 அம்சக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, 42 வருடங்களாகப் போராடிவரும் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கையைக் கண்டுகொள்ளாதிருப்பது ஏன்?

"ஆகவே, அனைத்து ஆசிரியர்களும் அதிபர்களும் உடனடியாக இணையவழிக் கற்பித்தலில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும். கட்டணம் அறவிட்டு மேற்கொள்ளப்படும் இணையவழிக் கற்பித்தலும் நிறுத்தப்படவேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியை சந்திப்பதற்கு

'மறு அழைப்பு கிடைக்கவில்லை'

■ எஸ்.நிதர்ஷன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் விரைவில் சந்திப்பு நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தும் அதற்கான மறு அழைப்பு இன்னமும் கிடைக்கவில்லை என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சுமந்திரனிடம், ஜனாதிபதிக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டு, பின்னர் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் மீண்டும் அத்தகைய சந்திப்புகள் இடம்பெறுமா என ஊடகவிலாளர்களால் கேள்வி கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், ஜனாதிபதிக்கும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் கடந்த 16ஆம் திகதியன்று சந்திப்பு நடைபெறுவதாக

இருந்ததெனவும் ஆயினும் அது பிற்போடப்படுவதாக எங்களுக்கு இரண்டு தடவைகள் தொலைபேசி அழைப்புகள் மூலமாக அறிவிக்கப்பட்டதெனவும் கூறினார்.

அதற்கு மேலாக அந்தச் சந்திப்பு இடைநிறுத்தப்பட்டதால் அதனால் ஏற்பட்ட சிரமத்துக்கு வருந்தவதாக கடிதம் மூலமாக இரண்டு தடவைகள் எம்மிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது. வெகுவிரைவிலே அந்தக் கூட்டம் நடைபெறுமென்று எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது எனவும், சுமந்திரன் கூறினார்.

ஆனால், அதற்குப் பிறகு இதுவரையில் எந்தவித அறிவித்தலும் இன்னமும் தங்களுக்கு வரவில்லை எனத் தெரிவித்த அவர், அவ்வாறான அறிவிப்புகள் ஏதும் வந்தால், அதன் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்றும் கூறினார்.

மேலும், ஆட்சியாளர்களின் செயற்பாடுகளைக் கண்டித்து போராடுபவர்களுக்கு எதிராக பாய்கின்ற அரசின் சட்டம் பெசில் ராஜபக்ஷவின் வருகையை கொண்டாடியவர்களுக்கு ஏன் பாயவில்லை எனக் கேள்வியெழுப்பிய சுமந்திரன், ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

அத்துடன், மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீளப் பெறும் வகையிலான செயற்பாடகளை தொடர்ந்தும் அரசாங்கம் முன்னெடுத்தால், அதற்கு எதிராக நீதிமன்றம் செல்வதற்குரிய நடவடிக்கையை எடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக உள்ளதாகவும், அவர் கூறினார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நேரம் கொடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு அபத்தமானது எனத் தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன், கட்சிக்குள்ளே பேச வேண்டிய விடயத்தை கட்சிக்குள்ளேயே பேச வேண்டமென்றும் இது பிரதான எதிர்க்கட்சியினருடன் பேச வேண்டிய விடயமல்ல என்றும் சாடினார்.

கனரக வாகனங்கள் நுழையத் தடை

■ எம்.எஸ்.எம். ஹனீபா

பொத்துவில், செங்காமம், அல் மினா வீதி மற்றும் மையவாடி வீதியில் கன ரக வாகனங்கள் பயணிக்கத் தடைசெய்யப்பட்டுள்ளதாக, பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர் எம்.எஸ்.எம். மர்சூக் தெரிவித்தார்.

செங்காமம் வயல் பிரதேசத்திலுள்ள கொடைவெளி ஆற்றிலிருந்து கனரக வாகனங்கள் மூலமாக மணல் ஏற்றிச் செல்வதால், குறித்த வீதிகள் பாதிப்படைவதாக கடந்த மாத பொத்துவில் பிரதேச சபை அமர்வில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை ஆராயும் பொருட்டு, பிரதேச சபைத் தவிசாளரால் தனது தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அமையப்பெற்ற குழுவின் அறிக்கையின் படி, சேதமடைந்த வீதிகளுக்கான நட்டஈடுகளை சம்மந்தப்பட்ட கனரக வாகன உரிமையாளர்களிடமிருந்து அறவிடுவது தொடர்பாக எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள பிரதேச சபை மாதாந்த அமர்வில் ஆராயப்படவுள்ளதாகவும் கூறினார்.

குறித்த வீதிகளூடாக கனரக வாகனங்கள் பயணிக்க தடை செய்யப்பட்டுள்ள சமிஞ்சை பலகை தற்போது பொருத்தப்பட்டுள்ளது.

இராணுவ உடைகள்,

தோட்டாக்களை வைத்திருந்தவர் கைது

■ பாறுக் ஷிஹான், ஏ.எல்.எம்.ஷினாஸ்

வீடான்றின் காணியில் இராணுவ உடையை ஒத்த பொருள்களை பரல் ஒன்றில் மறைத்து வைத்திருந்த ஒருவரை, சவளக்கடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை, சவளக்கடை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, சொறிக்கல்முனை வீரச்சோலை பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய இந்தச் சந்தேகநபர், நேற்று முன்தினம் (10) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து இருவேறு



வகையிலான இராணுவ உடைகள் இடங்கிய பொருள்கள் உட்பட 2 தோட்டாக்களும் மேலும் சில பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பரல் மீட்கப்பட்ட பகுதியில் விசேட அதிரடிப்படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதுடன், சவளக்கடை பொலிஸார் சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மனித பாவனைக்குதவாத உணவுப் பொருள்கள் மீட்பு

■ ரீ.எல்.ஜஸ்மர்கான்

மனித பாவனைக்குதவாத, காலாவதியான மற்றும் முத்திரை இடப்படாத பெருமளவு உணவுப் பொருள்கள், மட்டக்களப்பு நகரில் கைப்பற்றப்பட்டதாக, மட்டக்களப்பு, கோட்டைமுனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகரிலுள்ள மூன்று வர்த்தக நிலையங்களை, சுகாதார அதிகாரிகள், நேற்று (11) காலை முற்றுகையிட்டனர்.

இதன்போது, அங்கு விற்பனை செய்யப்பட்டுவந்த பழுதடைந்த, மனித பாவனைக்குதவாத பொதி

செய்யப்பட்ட மரமுந்திரிகை விதைகள், கோதுமை மா, கடலை, பிஸ்கட்டுகள் மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட காலாவதியான பானங்கள் என்பவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

கரையொதுங்கும் மருத்துவக் கழிவுகள்

யாழ்ப்பாணம் – குறிகாட்டுவான் கடற்கரை பகுதிகளில், இந்திய மருத்துவ கழிவுகள், கரையொதுங்கி வருவதை, நேற்று (11) காணக்கூடியதாக இருந்தது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர், நயினாதீவு கடற்கரை பகுதிகளிலும், இவ்வாறு பெருமளவான மருத்துவ கழிவுகள் கரையொதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படப்பிடிப்பு: எம்.றொசாந்த்)

தனிமையில் வாழ்ந்த

பெண் வன்புணர்வு; சந்தேகநபர் கைது

■ எம். றொசாந்த்

தனிமையில் வாழ்ந்த பெண் ஒருவரை பாலியல் ரீதியாக துன்புறுத்தியமை, வன்புணர்வு மற்றும் படுகாயம் ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ், 30 வயது நபரொருவர், வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், கடந்த வெள்ளிக்கிழமை (09) இரவு, அத்துமீறி வீடு புகுந்த மேற்படி நபர், வீட்டில் தனிமையில் வாழ்ந்த 35 வயதான பெண்ணை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

குளிக்கச் சென்ற

சிறுவனைக் காணவில்லை

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு - மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் - துணுக்காய் வீதியில், உதயசூரியன் நகர் பகுதியில், 14 வயது சிறுவன் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் விஜயகுமார் விதுசன என்ற சிறுவனே, இவ்வாறு நேற்று முன்தினம் (10) இரவு முதல் காணாமல் போயுள்ளார்.

இரவு 7 மணியளவில் வீட்டுக்கு அருகில் உள்ள கிணற்றில் குளிக்கச் செல்வதாகக் கூறிச் சென்ற நிலையில், சிறுவன் காணாமல் போயுள்ளார்.

சிறுவன் குளிக்கச் சென்ற கிணற்றடியில் அவரது உடைகள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன், கிணற்றடிக்குச் சென்ற சிறுவன் மீண்டும் வீட்டுக்கு வந்து சவர்க்காரம் எடுத்துச் சென்றுள்ளார். அவ்வாறு அவர் எடுத்துச் சென்ற சவர்க்காரம், மாங்குளம் - துணுக்காய் வீதியில் உள்ள அவரின் வீட்டுக்கு அருகில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

தகவல் அறிந்தோர், 077-0871475 எனும் அலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தகவல் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சிக்கு

புதிய பஸ் சேவை ஆரம்பம்

■ நடராஜா கிருஸ்ணகுமார்

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் புதிய பஸ் சேவையொன்று, இன்று (12) முதல் நடைபெறவுள்ளது.

இதற்கமைய, யாழ்ப்பாணம் - தெல்லிப்பளையில் இருந்து காலை 6.30 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் இந்தப் பஸ், காலை 7.25 மணிக்கு, கைதடியைச் சென்றடையும்.

பின்னர், அங்கிருந்து கிளிநொச்சி - அறிவியல் நகருக்கு காலை 8.25க்குச் சென்றடையும்.

மாலை 4.15 மணிக்கு அதே வழித்தடத்தின் ஊடாக, யாழ்ப்பாணம் -தெல்லிப்பளையை குறித்த பஸ் வந்தடையும்.

பசளை கோரி

கந்தளாய் விவசாயிகள் கவனயீர்ப்புப் போராட்டம்

■ எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச விவசாயிகளுக்கு பசளையை பெற்றுத்தருமாறு கோரி, கவனயீர்ப்புப் போராட்டமொன்று, கந்தளாய் விவசாயிகள் சங்கத்தால் நேற்று (11) முன்னெடுக்கப்பட்டது.

கந்தளாய் நீர்பாசன திட்டத்தினூடாக விவசாயம் மேற்கொள்ளும் 46 விவசாய அமைப்புகளின் தலைவர்கள், கந்தளாய், பேராற்றுவெளி விவசாய நிலத்தில் இக்கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்கள்.

அனுமதி மறுப்பு;

ஐன்னல் வழியாக செய்தி சேகரிப்பு

■ எச்.எம்.எம்.பர்ஸான்

ஓட்டமாவடி பிரதேசத்துக்கு நேற்று முன்தினம் (10) விஜயம் மேற்கொண்ட நீதி அமைச்சர் அலி சப்ரி, பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

இந்நிலையில், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் மீள்குடியேற்ற மக்களுக்கு வீடுகள் அமைக்க முதல் கட்டமாக ஒன்பது குடும்பங்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கி வைக்கப்பட்டது.

சுகாதாரப் பாதுகாப்புகளுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் செய்திகளைச்

சேகரிக்கச் சென்ற பிரதேச ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

நிகழ்வின் செய்திகளை சேகரிக்க நீண்ட நேரம் காத்திருந்த ஊடகவியலாளர்கள், நிகழ்வு நடைபெற்ற மண்டபத்தின் ஜன்னல் வழியாக ஒளிப்பதிவுகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வேலணை பல்பரிணாம நகரமாகின்றது

■ நடராஜா கிருஸ்ணகுமார்

வேலணை - வங்களாவடி நகர பகுதியை பல்பரிணாம நகரமாக அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுபீட்சத்தின் நோக்கு திட்டத்துக்கமைய. நாட்டில் 100 நகரங்களை பல்பரிமாண நகரத் திட்டமாக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ். யாழ்ப்பாணம் மாவட்டத்தில், 6 பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்த முயற்சி காரணமாக, யாழ். மாவட்டத்தின் வேலணை, சாவகச்சேரி, கொடிகாமம்,

நாவற்குழி, தெல்லிப்பளை மற்றும் மருதனார்மடம் ஆகிய பிரதேசங்கள் குறித்த பல்பரிமாண நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில், நேற்று முன்தினம் (10) வேலணை - வங்களாவடி நகர் பகுதியின் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கான கள ஆய்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தொழிற்சங்க பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக

‘ம.ம.மு.வின் கதவுகள் திறந்தே இருக்கும்’

■ நிலமேகம் பிரசாந்த்

மக்களின் தொழிற்சங்கப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, மலையக மக்கள் முன்னணியின் கதவுகள் எப்போதும் திறந்திருக்கும் எனவும் யாரும் வரலாம் கட்சி பேதமின்றி பிரச்சினைகளை தீர்த்து வைக்க மலையக மக்கள் முன்னணியும், மலையக தொழிலாளர் முன்னணியும் தயாராகவும் இருப்பதாக பொதுச் செயலாளர் க.சுப்ரமணியம் தெரிவித்தார்.

இதுவரை மலையக மக்களின் 3,188 தொழிற்சங்க பிரச்சினைகள் மலையக மக்கள் முன்னணியின் தொழிற்சங்கமான மலையக தொழிலாளர் முன்னணி ஊடாக தீர்த்து வைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

“மலையகத்தில் காணப்படும் 28 காரியாலயங்களும் 106 தொழிற்சங்க உத்தியோகத்தர்களும் மக்களின் நலனுக்காக சேவை செய்து வருகின்றனர்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே.ராதாகிருஸ்ணனின் சிறப்பான தலைமைத்துவத்தின் ஊடாக, எவ்வித உத்தியோகத்தர்களும் பணி நீக்கமின்றி செவ்வனே சேவை செய்து, மக்களின் தொழிற்சங்க பிரச்சினைகளை தீர்ப்பதில் மும்முரமாக உத்தியோகத்தர்களும் கட்சியும் செயற்படுவதாகக் கூறினார்.

“மேலும், மக்களின் பிரச்சினைகளை கேட்டறிய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதோடு, இதன் மூலம் மக்களின் பிரச்சினைகளை தேடியறிவது மட்டுமல்லாமல் தேடிவரும் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்கப்படுகின்றது” என்றார்.

சதொச மெகா கிளை

மொனராகலை நகரில், சதொச மெகா விற்பனை நிலையமொன்று, வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவால் நேற்று (11) திறந்து வைக்கப்பட்டது. (சுமணசிறி குணதிலக)

உயர்தர மாணவன் டெங்குவால் மரணம்

■ பாலித ஆரியவன்ஸ

டெங்கு காய்ச்சல் ஏற்பட்டு, பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பாடசாலை மாணவனொருவன் மரணமடைந்துள்ளார்.

ஹாலி-எல வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 19 வயதுடைய இந்த மாணவன், இம்முறை உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பதுளை பொது வைத்தியசாலையில் அதிகமானோர் டெங்குக் காய்ச்சாலால் பீடிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருவதாகவும் இவர்களுள் சிலர், பதுளை-ஹிந்தகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கணவன் வழியில் பயணித்த

கர்ப்பிணி கைது

■ சேஹன் செனவிரத்ன

போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்ட கர்ப்பிணியொருவரும் மற்றொரு நபரும், இசலு மஹியாவ பிரதேசத்தில் வைத்து, கண்டி பொலிஸாரால் கைதுசெ ய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களைக் கைதுசெய்யும் போது, கர்ப்பிணியிடமிருந்து 2 கிராம் 420 மில்லிகிராம் ஹெரோய்னும் மற்றைய சந்தேகநபரிடமிருந்து 2 கிராம் 230 மில்லிகிராம் ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் இருவரும் இதற்கு முன்னரும் போதைப்பொருள் விநியோகம் தொடர்பில், குற்றவாளியாக இனங்காணப்பட்டவர்கள் என்றும், குறித்த கர்ப்பிணியின் கணவரும் போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில், சிறைத்தண்டனை அனுபவித்து வருபவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொத்தலாவல சட்டமூலத்துக்கு

கண்டியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு, அரசாங்கம் எடுக்கும் முயற்சிக்கு எதிராக, கருத்துகளை முன்வைக்கவும் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் உள்ள உரிமையை ஒடுக்க அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்துக்கு எதிராக, பேராதனை பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கத்தால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று, கண்டி நகரில் நேற்று (11) முன்னெடுக்கப்பட்டது.

கடந்த அரசாங்கம் செய்த தவறை மீண்டும் இடம்பெற இடமளிக்கமாட்டோம் என அதிகாரத்தைக் கைப்பற்றிய தற்போதைய அரசாங்கம், கடந்த அரசாங்கம் முன்னெடுத்த சுதந்திர கல்வியை அழிப்பது தொடர்பான கொத்தலாவல சட்டமூலத்தை, நாட்டின் தற்போதைய கொரோனா நிலையின் மத்தியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டினர்.

இதற்கு எதிராக குரல்கொடுத்த மாணவர்கள், தொழிசங்கங்க பிரதிநிதிகள் உள்ளிட்டவர்களை கைதுசெய்தமையை தீவிரமாக்கக் கண்டிப்பதாகவும், சங்கத்தின் தலைவர் கயான் அகில ஜயதிலக இதன்போது தெரிவித்தார்.

திருமணங்கள் நடைபெறாமையால்

1.5 மில்லியன் பேர் தொழிலை இழந்தனர்’

■ உமா மகேஸ்வரி

திருமணங்கள் மற்றும் உற்சவங்கள் நடைபெறாமை காரணமாக, நாட்டில் 1.5 மில்லியன் பேர், நேரடியாக தொழில் வாய்ப்பை இழந்துள்ளதாகவும், குறிப்பாக பூக்கள் விநியோகிப்பவர்கள், வாகன வாடகைக்கார்ர்கள், கேக் உற்பத்தியாளர்கள் மற்றும் திருமண ஆடை தயாரிப்பாளர்கள் உள்ளிட்ட 3 மில்லியன் பேர் தமது வருமானங்களை இழந்துள்ளனர் என, இரத்தினபுரி மாவட்ட திருமணம் மற்றும் மங்கள சேவை வழங்குனர்களின் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசேகர தெரிவித்தார்.

குருவிட்ட கிரேண்ட் கார்டியன் ஹோட்டலில் நேற்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், குறிப்பாக இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பெருந்தோட்டங்களைச் சேர்ந்த அதிகமான இளைஞர்கள் உரிய பயிற்சிகளைப் பெற்று, ஹோட்டல் துறைகளில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கொரோனா தொற்றால் இவர்கள் வருமானமின்றி கஷ்டப்படும் நிலையில், மீண்டும் திருமண நிகழ்வுகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளமை, மகிழ்ச்சியளிப்பதாக அவர்

சீரற்ற வானிலை

கடந்த மூன்று நாள்களாக நாட்டின் பல பிரதேசங்களிலும் தொடர்ச்சியாக பெய்து வரும் பலத்த மழை காரணமாக மலையகத்தின் பல இடங்களிலும் மண்சரிவு, வெள்ளம் மற்றும் மரம் முறிந்து குடியிருப்புகளில் விழுந்தமை போன்ற சம்பவங்கள் பதிவாகின.

வீடுகள் மீது சரிந்த மண்மேடுகள்

கினிகத்தேனை- பிளக்வோட்டர் தோட்டத்திலுள்ள வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்துள்ளது.

அத்துடன், கினிகத்தேனை- கெனில்வேர்த் 4ஆம் இலக்க பிரிவின் வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடொன்றின் மீதும் மண்மேடு சரிந்து விழுந்தால், அவ்வீட்டின் ஒரு பகுதி சேதமாகியுள்ளது.

இரத்தினபுரியில் 9,504 பேர் பாதிப்பு

சீரற்ற வானிலையால், இரத்தினபுரி மாவட்டத்தில் 2,361 குடும்பங்களைச் சேர்ந்த 9,504 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலினி போத்தாகம தெரிவித்துள்ளார்.

அத்துடன்,187 வீடுகள் பகுதியளவிலும் ஒரு வீடு முற்றாகவும் சேதமடைந்துள்ளது என்றார்

மவுசாகலை வான்கதவுகள் திறப்பு

மஸ்கெலியா மவுசாகலை நீர்தேக்கத்தின் மூன்று வான் கதவுகள், நேற்று (11) காலை திறந்து விடப்பட்டுள்ளன. மழை அதிகரிக்குமாயின் ஏனைய வான்கதவுகளும் திறந்து விடப்படுமென கெனியன் நீர் மின் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பொல்பிட்டியவில் போக்குவரத்து பாதிப்பு

ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியின் கினிகத்தேனை -கலுகல யட்டிபேரிய, பொல்பிட்டிய பகுதியில் ஏற்பட்டுள்ள மண்சரிவால் குறித்த வீதியுடனான போக்குவரத்து நேற்று (11) இரண்டாவது நாளாகவும் பாதிக்கப்பட்டது.

9ஆம் திகதி இரவிலிருந்து இப்பாதையுடனான போக்குவரத்தில் தடை ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், சரிந்துள்ள மண்ணை அகற்றும் பணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் முன்னெத்து வரும் நிலையில், இப்பணி நிறைவடைந்ததும் போக்குவரத்து வழமைபோல் நடைபெறும் என்றும் நுவரெலியா அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், குறித்த இடத்தில் தொடர்ச்சியாக மண்சரிவு ஏற்படலாம் என்ற அச்சத்தில், அங்கு வசித்தவர்கள், அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள் ளனர்.

பாலமும் அள்ளுண்டுச் சென்றது

யட்டியந்தோட்டை- பெரன்னாவ பிரதேசத்தில் வீஓயாவுக்கு மத்தியில் அமைக்கப்பட்டிருந்த பாலமானது, நேற்று முன்தினம் (10) இரவு பெய்த கடும் மழை காரணமாக அள்ளுண்டு செல்லப்பட்டுள்ளது.

இதனால் இந்தப் பாலத்தைப் பயன்படுத்தி வந்த வரகாதென்ன, மாவத்த, தென்னேவத்த பிரதேச மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நோட்டன் வீதியில் மண்சரிவு

கொழும்பு- ஹட்டன் பிரதான வீதியில் தியகல சந்தியில் மண்மேடு சரிந்து விழுந்த

நிலையில், குறித்த வீதியுடனான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. எனினும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், மண்ணை அகற்றி போக்குவரத்து நடவடிக்கையை வழமைக்குக் கொண்டு வந்தனர்.

இதேவேளை, மஸ்கெலியா- நல்லதண்ணி பிரதான வீதியின் மோகினி நீர்வீழ்ச்சிக்கு அருகில், மண்மேடு நேற்று முன்தினம் (10) சரிந்து விழுந்து போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

வீடுகளுக்குள் புகுந்த வெள்ளநீர்

டிக்கோயா- இன்ஜஸ்ட்ரி தோட்டத்திலுள்ள 4 குடியிருப்புகளுக்குள் வெள்ளநீர் சென்றதால், குறித்த வீடுகளைச் சேர்ந்த 12 பேர் பாதிக்கப்பட்டனர்.

குடியிருப்புகள் ஆபத்தில்

பொகவந்தலாவை- கெம்பியன் கீழ் பிரிவில் குடியிருப்புகள் மீது, கற்பாறைகள் சரிந்து விழும் அபாயத்தை எதிர்கொண்டுள்ள 33 குடும்பங்களுக்கு, வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், கட்டட ஆய்வை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமென, நோர்வூட் பிரதேச சபை தவிசாளர் ரவி குழந்தைவேல் உறுதியளித்துள்ளார்.

திருமண வீட்டில் மரம் முறிந்து விழுந்தது

பெல்மதுளை- பாத்தக்கட பகுதியில் திருமண வீடொன்றின் மீது பாரிய மரமொன்று முறிந்து விழுந்தால், குறித்த திருமண வீடு உள்ளிட்ட 2 வீடுகள் சேதமடைந்தன.

பன்விலையில் மின்துண்டிப்பு

கண்டி, பன்வில, மடுல்கல,புரன்கும்பர மற்றும் அப்பலபெத்த போன்ற இடங்களில் நேற்று முன்தினம் (10) வீசிய கடும் காற்றால், மின்தடை ஏற்பட்டதுடன், புசல்லாவை- சோகம தோட்டத்தில் மண்சரிவும் ஏற்பட்டது.

இந்நிலையில் நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் சீரற்ற வானிலை இன்னும் சில நாள்களுக்கு நீடிக்கும். அவ்வப்போது கடுங்காற்று வீசுமென வானிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

உமாமகேஸ்வரி , எஸ்.சதீஸ், சுதத். எச்.எம் ஹேவா, மெய்யன், என்.ஆராச்சி, எம்.கிருஸ்ணா, செ.தி பெருமாள், இரா. யோகேசன்

இன்னுயிரை மாய்ப்பது கோழைத்தனமான முடிவாகும்

ஒருவர், தன்னுடைய உயிரை மாய்த்துக்கொள்ளும் உரிமையைக் கொண்டிருக்கவில்லை என்பதை முதலில் சகலரும் விளங்கிக் கொள்ளவேண்டும். அதேபோல, அடுத்தவரின் உயிரையும் பலவந்தமாகப் பறித்துவிடக்கூடாது. ஆனால், இவையிரண்டும் சாதாரணமாக பரவலாகவே இடம்பெற்றுவருகின்றன.

சிலநேரங்களில், தற்செயலாக ஒருவரின் உயிர் பறிக்கப்பட்டுவிடும். இதுவும் கூட, ஒருசில நிமிடங்கள் நிதானம் தவறியதால் ஏற்பட்ட விபரீதமாகவே இருக்கும். அங்கு நிதானத்துடன் இருந்திருந்தால், உயிரைக் காப்பாற்றியிருக்கலாம்.

இன்னுயிரை மாய்த்துக்கொள்ள முயன்று தோற்றுப்போவோருக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. "இவனைப் பார்த்தாவது திருந்த வேண்டும்" என்பதற்காகவே, தண்டப்பணத்துடன் கூடிய கடும் தண்டனைகள் விதிக்கப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை, சமூக வேலைகளுடன் சம்பந்தப்பட்டவைகளாகவே இருக்கும்.

தன்னுயிரை மாய்த்துக்கொள்வதிலிருந்து ஒவ்வொருவரையும் தடுக்கவேண்டுமாயின், சிறுவயதிலிலிருந்தே தோல்விகளிலிருந்து வெற்றிப்படிக்காக தட்டிக்கொடுக்கவேண்டும். சிறு சிறு தோல்விகளால் துவண்டுபோவோர் வாழ்க்கையின் வெறுமைக்கே சென்றுவிடுவர். சின்னச் சின்ன விடயங்களில் தொடர் வெற்றிகண்டதன் பின்னர், எதிர்பார்த்த வெற்றி கிடைக்காவிடின், மனச்சோர்வு அடைந்துவிடுவர்.

தோல்வியும் வெற்றியும் கலந்தே இருக்கவேண்டுமென்ற தத்துவத்தைக் கற்றுக் கொடுக்கவேண்டும். அதனூடாகவே, ஒருவழியில்லையெனின் மற்றுமொரு நல்ல வழியிருக்கும். என்பதைப் பலரும் புரிந்துகொள்வர். இல்லையேல், பயணித்துக் கொண்டிருந்த வழியில் சிறு தடங்கல் ஏற்பட்டுவிட்டாலும் தட்டுத்தடுமாறித் திக்குத்தெரியாமல் போய்விடுவர்.

அதுவே, தன்னுயிரை மாய்த்துக் கொள்வதற்கான தூண்டிலாக அமைந்துவிடும். ஆக, ஒருவழியில்லை, பலவழிகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் முயற்சிகளை மேற்கொண்டால் வெற்றியடையலாம். தோல்வியும் வெற்றியும் கலந்ததுதான் வாழ்க்கை என்பதை கற்றுக்கொடுத்தால், இன்னுயிரை மாய்த்தலுக்கு இடமேயிருக்காது.

வாழ்க்கையைக் கொண்டுநடத்துவதில் கடும் சிரமங்களை ஒவ்வொருவரும் எதிர்கொண்டுவருகின்றனர். இதில், குடும்பச் சுமை பெருஞ்சுமையாகும். அதிலிருந்து தலை தூக்குவதற்கு திட்டமிடல் முக்கியமானது. வரவுக்கேற்ற செலவைத் திட்டமிடல், இல்லையேல் செலவைக் குறைத்தல், இன்றேல் வருமானத்துக்கான வழிவகைளைத் தேடிக்கொள்ளலாகும்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக இலங்கை ஒட்டுமொத்த தற்கொலை வீதத்தை 70 சதவீதமாகக் குறைத்துள்ளதென இலங்கை மருத்துவ சங்கத்தின் தரவுகளில் தெரிவிக்கப்படுகின்றது. தன்னுயிரை மாய்த்துக்கொள்வதற்கு பல வழிகளைப் பலரும் தேடுவர், அதிலும் 'வலியில்லாத வழி'க்கே முக்கியத்துவம் கொடுப்பர்.

கிராமப்புறங்களிலேயே ஆகக் கூடுதலானோர், தன்னுயிரை மாய்த்துக்கொள்கின்றனர். அதற்கு அபாயகரமான பூச்சி கொல்லிகள் பிரதான காரணியாக இருந்தன. எனினும், அரசாங்கம் விதிமுறைகளைத் தொடர்ச்சியாக இறுக்கியமையால், அங்கு குறைந்துள்ளன.

வலியில்லாத வாழ்க்கை சுவாரஸ்யமற்றது. வ(லி)(ழி)கள் கூடிய வாழ்க்கையே அர்த்தபுருஷ்டியானதாக அமையும். ஆகையால், பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் உள்ளன. அவற்றைத் தேடிப் பயணிப்போமாயின். கோழைத்தனமான முடிவுகளை எடுப்பதிலிருந்து விலகிச்செல்லாம் என்பதை நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

வாழ்வியல் தரிசனம்

எவரையும் அதிகாரம் மூலம் மிரட்டுவது, தாக்குதல் நடத்துவது சட்டத்தை மீறுவதாகும். குற்றச் செயல்களைச் செய்யும் நபர்களை விசாரணைக்கு உட்படுத்தும் போது அவதானம் தேவையானது.

உண்மைகளை சொல்லப்போனால், குற்றம் சுமத்தப்பட்டவர்களில் எல்லோரும் குற்றம் புரிந்தவர்கள் அல்லர். ஆனால், நிரபராதிகள் என நிரூபிக்கப்படல் வேண்டும். ஆதாரங்களை கண்டறிதல் மூலம்தான் உண்மைகளை அறியமுடியும்.

எனினும், தொடர்ந்தும் குற்றமிழைக்கும் சமூக விரோதிகள் நியாயங்களைத் துச்சமாகக் கருதுகின்றனர். வெளிநாடுகளில், குற்றவாளிகளை மனோத்துவ முறையில், சாதூர்யமாகக் கண்டு கொள்கின்றனர். பொலிஸார் உண்மை நிலையை நவீன முறையில் கண்டுப்பிடிக்கின்றனர். நடுநிலை நெகிழ்வு கூடாது.

நீதி நிலைபெற சட்டம் கடுமையாக்கப்படல் வேண்டும். எந்த சமூக விரோதிகளும் தப்பிவிடக்கூடாது. அதேசமயம் நிரபராதிகள் தண்டனை பெறக்கூடாது. குற்றச்செயல்களின் ஆணிவேர் கண்டுப்பிடிக்கப்படவேண்டும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

குடும்ப ஆட்சியும் இலங்கையும்

என்.கே.அஷோக்பரன்

சமகால அரசியலில் குடும்ப ஆட்சிக்கு இடமில்லை என்று அண்மையில் நாமல் ராஜபக்ஷ சொல்லியிருந்த கருத்து பெரும் நகைமுரணான வரவேற்பைப் பெற்றிருந்தது. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி, அவரின் அண்ணன் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் மற்றும் முக்கிய பொருளாதாரம் சார்ந்த அமைச்சுக்களையும் தன்னகத்தே கொண்டிருக்கிறார்,

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியாடாத, தேசியப்பட்டியலில் கூட பெயர் இடம்பெறாத, ஆனால் இன்று பாராளுமன்றம் ஏகியுள்ள தம்பி பெசில் ராஜபக்ஷ நிதி அமைச்சர், அண்ணன் சமல் ராஜபக்ஷ அமைச்சரவை அமைச்சர், அவரின் மகன் சஷீந்திர ராஜபக்ஷ இராஜாங்க அமைச்சர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ அமைச்சரவை அமைச்சர், ராஜபக்ஷர்களின் சகோதரியான காந்தனி ராஜபக்ஷ ரணவக்கவின் மகன் நிபுன ரணவக்க மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர். மஹிந்தராஜபக்ஷவின் இன்னொரு மகனான யோஷித ராஜபக்ஷ பிரதமரின் அலுவலர்களின் முதல்வர்.

2015 முன்னர் இருந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் தலைவராக இருந்த நிஷாந்த விக்ரமசிங்ஹ, மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியான ஷிரந்தி ராஜபக்ஷவின் சகோதரர். அதே ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் இயக்குனர்களில் ஒருவராக இருந்த சமீந்திரராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷவின் இன்னொரு மகன். 2006 காலப்பகுதியில் ரஷ்யாவுக்கான இலங்கை தூதுவராக நியமிக்கப்பட்டவரும், கொவிட்-19 பெருந்தொற்றுக்கு மத்தியில் உக்ரேன் சுற்றுலாப்பயணிகளை இலங்கைக்கு அழைத்து வந்தவருமான உதயங்க வீரதுங்க மஹிந்த ராஜபக்ஷவின் தாயின் சகோதரியின் மகன்.

முன்னர் அமெரிக்காவிற்கான இலங்கை தூதுவராக நியமிக்கப்பட்ட ஜாலிய விக்ரமசூரிய மஹிந்த ராஜபக்ஷவின் தந்தையின் சகோதரர் டீ.எம். ராஜபக்ஷவின் மகளின் மகன். மத்தளை விமானநிலையம் கட்டப்பட்ட காலத்தில் சிவில் விமானசேவை அதிகாரசபையின் தலைவராக இருந்த பிரசன்ன விக்ரமசூரிய, ஜாலிய விக்ரமசூரியவின் தம்பியாவார். நாமல் ராஜபக்ஷவின் கருத்து நகைமுரணான வரவேற்பைப் பெற்றமைக்கு இந்தப் பின்புலம்தான் காரணம்.

குடும்ப ஆட்சி என்று தமிழில் நாம் சுட்டுவதை ஆங்கிலத்தில் நெபொடிஸம் (Nepotism) என்பார்கள். இது nepotismo என்ற இத்தாலிய வார்த்தையிலிருந்து வந்தது. இந்த வார்த்தையின் வேர் nepos என்ற இலத்தீன் வார்த்தை. இலத்தீனில் nepos என்றால் nephewமருமகன் என்று அர்த்தம். 17ஆம் நூற்றாண்டிற்கு முன்னர், பாப்பரசர்களின் தமது அதிகாரத்தை தமக்கடுத்து, தமது மருமகன்களுக்கு வழங்கிய வழக்கத்தைக் குறித்து இந்தச் சொல் உருவாகியிருக்கலாம் என்கிறார்கள் சில ஆய்வாளர்கள். ஆனால் இந்தச் சொல்லின் பயன்பாடு, ஜனநாயக வெளியில்தான் முக்கியத்துவம் மிக்கதாக அமைகிறது.

ஃபிரஞ்ச் புரட்சிக்கு முன்னர், அறுதிப்பலங்கொண்ட முடியாட்சியாக இருந்த பதின்நான்காம் லூயியின் ஆட்சியின் போது, தனது அறுதிப்பலத்தைக் குறிக்க பதின்நான்காம் லூயி சொன்னதான சொல்லப்படும் கூற்றுதான் "லீ டட் சீ முஆ" (l'etat, c'est moi), அதாவது "அரசு, அது நானே" (நானே அரசு). கவனிக்க, அரசன் நானே என்று லூயி சொல்லவில்லை, அரசே நான்தான் என்பதுதான் அவரது கூற்று. இத்தகைய அறுதிப்பலங்கொண்ட முடியாட்சியை வீழ்த்தித்தான் பிற்காலத்தில் நவீன ஜனநாயகம் பிறக்கிறது.

ஃபிரஞ்ச் புரட்சியின் சிந்தாந்தகர்த்தாக்களில் ஒருவரான மொன்டஸ்க்யு "அதிகாரப் பிரிவுக் கோட்பாட்டை" முன்வைத்தது அறுதிப்பலங்கொண்ட தனிநபரின், அல்லது குழுக்களின் ஆட்சி உருவாகிவிடக்கூடாத என்பதனால்தான். ஓர் அரசின் மூன்று பாகங்களான சட்டவாக்கம், சட்டநிர்வாகம், நீதி ஆகியன ஒரு நபரின் அல்லது ஒரு குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடாது என்பதுதான் மொன்டெஸ்க்யூவின் கருத்தின் அடிப்படை. "அரசு, அது நானே" என்ற நிலை ஜனநாயகத்துக்கு உவப்பானதல்ல என்பதுதான் அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டின் தாற்பரியம். ஆகவேதான் குடும்ப ஆட்சி ஜனநாயக விரோதமானதாகக் கருதப்படுகிறது.

இந்த இடத்தில்தான் சிக்கலானதொரு மாற்றுக்கருத்து இடையீடு செய்கிறது. இங்கு கோட்டாபய, மஹிந்த, சமல், சஷீந்திர, நாமல் ஆகிய ராஜபக்ஷர்களும், நிபுன ரணவக்கவும் தேர்தலில் கோட்டியிட்டு மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள். ஆகவே, இதனை ஜனநாயக விரோதம் என்று எப்படிச்சொல்லலாம் என்ற கேள்வியில் சில நியாயங்கள் தென்படலாம்.

பெசிலின் நியமனம் வெளித்தோற்றத்திற்கு ஜனநாயக விரோதமானது என்பதில் மாற்றக்கருத்துக்கள் இருக்கமுடியாது. ஆனால், பெசில் தேர்தலில் போட்டியிட்டிருந்தால் அவர் வெற்றி பெற்றிருப்பார் என்பதில் பெரும் ஐயம் எழ முடியாது. இதற்குக் காரணம் எமது நாட்டின் அரசியல் கலாசாரம். எமது நாடு என்பதை விட, தெற்காசியாவின் அரசியல் கலாசாரம் என்று சொல்வது இன்னும் பொருத்தமாக இருக்கும்.

ஜனநாயகம் என்பது எமது நாடுகளில் போராடிப் பெறப்பட்ட ஒன்றல்ல. ஃபிரன்ஞ்ச் புரட்சியைப் போன்ற பெரும் புரட்சிகள் இங்கு மக்களால் நடத்தப்பட்டு முடியாட்சி வீழ்த்தப்படவில்லை. பிரித்தானிய கொலனித்துவத்துவக் காலகட்டத்தில் ஜனநாயகத்தின் சில அம்சங்கள் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டன. ஜனநாயக, தாராளவாத சிந்தனைகள் வலுப்பெறத்தொடங்கிய காலகட்டத்தில் பிரித்தானிய மற்றும் ஐரோப்பிய கல்வியைப் பெற்றுக்கொண்ட உயர்குழாம் அங்கு பிரபலமாகிக்கொண்டிருந்த ஜனநாயக, தாராளவாத சிந்தனைகளை இங்கு கொண்டுவந்தார்கள்.

ஆகவே, ஒருவகையில் சிந்தித்தால் இங்கு ஜனநாயகம் என்பது உயர்குழாமின் செயற்றிறட்டமாகவே இருந்தது. இதனால் ஜனநாயகக் கட்டமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டாலும், ஜனநாயக சிந்தனைகள் இங்கு பெருமளவிற்கு வேரூன்றவோ, வளம்பெறவோ இல்லை. நிலபிரபுத்துவக் கால சிந்தனைகளின் செல்வாக்கு தொடரவே செய்தது. அதனால்தான் ஆரம்பகாலம் முதல், இன்று வரை பிரித்தானிய கொலனித்துவ காலத்தில் பிரித்தானிய ஆட்சியாளர்களின் ஆதரவால் செல்வாக்குப் பெற்ற குடும்பங்களாக மாறியவையே, இன்றும் அரசியலிலும் செல்வாக்கோடு தொடர்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இதனைக் குறிப்பிடுவதால் ஜனநாயகத்தால் மற்றவர்களுக்கு வாய்ப்பே கிடைக்கவில்லை என்று அர்த்தமல்ல. ஆனால் அதிகாரத்தின் ஸ்தலம் பெருமளவிற்கு மாறவில்லை. அவ்வப்போது ஏற்படும் குறுகிய மாற்றங்கள் கூட, புதிய "நிலபிரபுக்களை" உருவாக்குகிறதேயன்றி, இங்கு ஜனநாயக அரசியல் கலாசாரம் உறுதியடையவில்லை. 1936ல் தெற்கிலிருந்த கிராமமொன்றில் நிலவுடைமையாளர்களாக இருந்த ராஜபக்ஷர்களின் குடும்பத்திலிருந்து டீ.எம்.ராஜபக்ஷ அரச சபைக்கு தெரிவு செய்யப்படுவதோடு ராஜபக்ஷர்களின் அரசியல் பிரவேசம் தொடங்கியது.

1945ல் டொன் மத்யூ ராஜபக்ஷவின் மரணத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற இடைத் தேர்தலில் அவரின் சகோதரரும், மஹிந்த ராஜபக்ஷவின் தந்தையாருமான டொன் அல்வின் ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெறுகிறார். அதன் பின்னர் அரசியலில் அவர்களின் ஆதிக்கம் மக்களின் வாக்குகளோடு அதிகரித்ததேயன்றி குறையவில்லை. ஆகவே இந்த குடும்ப ஆட்சிக்கு அவர்கள் மட்டும் காரணமல்ல. அவர்களுக்கு வாக்களிக்கும் மக்கள்தான் பிரதான காரணம்.

இந்தியாவில் தேர்தலில் போட்டியிட நேரு பரம்பரையில் வந்தவன் என்பதைத்தவிர ராகுல் காந்திக்கு வேறு எந்த தகுதியும் தேவையில்லை. அதுபோலத்தான் இங்கும் பண்டாரநாயக்க, ராஜபக்ஷ, சேனநாயக்க, விக்ரமசிங்ஹ, விஜேவர்த்தன போன்ற குடும்பங்களைச் சார்ந்தவர்களின் நிலையும். இதற்கு அவர்கள் காரணம் என்று சொல்வது சோம்பேறிகளின் சாட்டாகத்தான் இருக்க முடியும்.

தேர்தலில் வெல்லவும், அதிகாரத்தைக் கைப்பற்றவும் ஒரு வாய்ப்பு இருக்கும் போது அதனை அவர்கள் பயன்படுத்தக்கூடாது என்று எதிர்பார்ப்பதில் நியாயமில்லை. இங்கு மக்களின் சிந்தனையும், மனநிலையும், அரசியல் கலாசாரமும்தான் மாறவேண்டும். ஒருவர் நல்லவர் வல்லவர் என்பதற்காக அவரது தம்பிக்கும், மனைவிக்கும், மகனுக்கும், பேரனுக்கும் வாக்களிக்கும் மக்கள் கூட்டம் குடும்ப ஆட்சியைப் பற்றி விமர்சிக்கும் தகுதியை இழந்துவிடுகிறது.

அதேவேளை ஒருவர் அரசியலில் இருந்தார் என்பதனால், அவரது மகனோ, பேரனோ, தம்பியோ, மனைவியோ அரசியலுக்கு வரவே கூடாது என்பதும் அபத்தமாகும். இந்த நிலையில் ஒரு சாதகமான சமநிலையை சாதிப்பதற்கு வலுவான ஜனநாயக விழுமியங்களும், ஜனநாயகக் கட்டமைப்புக்களும், ஜனநாயக அரசியல் கலாசாரமும் கட்டியெழுப்பப்பட வேண்டும். அத்தகையதொரு கட்டமைப்பும், கலாசாரமும் இல்லாது போனால், இன்றுள்ள நிலபிரபுத்தன மனநிலையின் தொடர்ச்சியை நாம் மாற்றியமைக்க முடியாது.

மாறாக காலங்காலமாக குடும்ப ஆட்சி பற்றி பிதற்றிக்கொண்டிருக்கும் கையறு நிலையில் நாம் சிக்கிக்கொண்டு விடுவோம். ஒரு வகையில், இந்த கலாசார மாற்றம் ஏற்படுதவற்கு இந்த குடும்ப ஆட்சியின் வல்லாதிக்கம் உதவலாம். இந்த வல்லாதிக்கம் அதிகரிக்க அதிகரிக்க, ஆட்சி தோல்வியடையும். அப்போதுதாவது மக்கள் இத்தகைய ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழுவார்களேயானால், இங்கும் ஜனநாயனத்தின் தாற்பரியமும், தேவையும் மக்களால் நேரடியாக உணரப்படும். அது மட்டும்தான், இந்த நிலையை மாற்றியமைப்பதற்கான விதையாக அமையும்.

கடிதங்கள்

'விவசாயத்துக்கு வழி அமைக்கவும்'

முல்லைத்தீவு, கோட்டை கட்டிய குளத்தின் கீழ் உள்ள சுமார் 420 ஏக்கர் விவசாய நிலங்களை செழிப்பாக்குவதற்கான வழிகளை அமைத்துத் தருமாறு, அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதற்காக, நீர்பாசன வாய்க்கால்கள், விவசாய வீதிகள் மற்றும் கழிவு வாய்க்கால்கள் என்பவற்றை புனரமைத்துத் தருமாறும் அவர்கள் கோருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் நீர்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள கோட்டை கட்டிய குளத்தின் கீழ் 120க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிர்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், விவசாய நிலங்களுக்கான நீர் விநியோகத்தை மேற்கொள்ளுகின்ற நீர்ப்பாசனக் கால்வாய்கள் நீண்டகாலம் புனரமைக்கப்படாமல் சேதமடைந்து காணப்படுகின்றன. இதனால் பெருமளவான நீர் வீண் விரயமாகி வருகின்றது.

எனவே, இக்குளத்தின் கீழான நீர்ப்பாசன வாய்க்கால்களைப் புனரமைத்து தருமாறு கோரும் விவசாயிகள், அவ்வாறு நீர் விநியோக வாய்க்கால்கள் புனரமைக்கப்படும் போது, கூடுதலான நிலப்பரப்பில் சிறுபோக செய்கையை மேற்கொள்ள முடியுமென குறிப்பிடுகின்றனர்.

– சுப்பிரமணியம் பாஸ்கரன்

மொத்த தேசிய உற்பத்தி

முதல் காலாண்டில் உயர்வு

2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 4.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது என அரசாங்க தொகைமதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் அறிவித்துள்ளது. 2020 ஆம் ஆண்டு 1.8 சதவீத வளர்ச்சியை பதிவு செய்திருந்ததைத் தொடர்ந்து, நடப்பு ஆண்டின் முதல் காலாண்டில் இந்த வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளமை விசேட அம்சமாகும்.

விவசாயத்துறை 6.1 சதவீதத்தினாலும், தொழிற்துறை 5.5 சதவீதத்தாலும், சேவைகள் துறை 3.0 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்திருந்தது.

2020 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தில் நாட்டில் கொவிட்-19 இரண்டாம் அலைத் தாக்கம் பரவத் தொடங்கியதைத் தொடர்ந்து பொருளாதாரம் பெருமளவி பாதிப்படைந்திருந்தது. ஆனாலும், சுற்றுலாத் துறை மற்றும் களியாட்டம் தவிர்ந்த ஏனைய பல வர்த்தகச் செயற்பாடுகள் படிப்படியாக மீளமைக்கப்பட்டிருந்தன.

பணவீக்கத்துடனான மொத்தத் தேசிய உற்பத்தி 8.6 சதவீதத்தால் அதிகரித்து 4,173 பில்லியன் ரூபாய்களாக பதிவாகியிருந்தது.

விவசாயத்துறை 6.5 சதவீத மறைப் பெறுமதி என்பதிலிருந்து 6.1 வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. இதில் தேயிலை உற்பத்தி 37.9 சதவீதம், தானியங்கள் 34.8 சதவீதம், நன்னீர் மீன்பிடி 27 சதவீதம், இறப்பர் 16 சதவீதம், மரக்கறி 14.5 சதவீதம், தேங்காய் 6.4 சதவீதம் மற்றும் மீன்பிடி 16 சதவீத வளர்ச்சியை பதிவு செய்திருந்தன.

தொழிற்துறையைப் பொறுத்தமட்டில் 6.8 சதவீதமும், இரசாயனங்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் 20 சதவீதம், இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் 12.9 சதவீதம், ஆடை உற்பத்தி 8.4 சதவீதம், உணவு மற்றும் புகையிலை 6.0 சதவீதம் மற்றும் இயந்திர சாதனங்கள் 8.1 சதவீத வளர்ச்சியை பதிவு செய்திருந்தன.

நிர்மாணத்துறை 4.3 சதவீத வளர்ச்சியை பதிவு செய்திருந்தன.

சேவைகள், தொலைத்தொடர்பாடல் ஆகிய துறைகள் 19.1 சதவீதம், தகவல் தொழில்நுட்பம் 14.9 சதவீதம், நிதியியல் 13.1 சதவீதம் மற்றும் காப்புறுதி 11.4 சதவீத வளர்ச்சியை பதிவு செய்திருந்தன.

மொத்த மற்றும் விற்பனைத் துறை 3.7 சதவீதம் மற்றும் போக்குவரத்து 1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தன.

தங்குமிடங்கள் மற்றும் உணவு சேவைகள் போன்றன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 31.9 சதவீத வீழ்ச்சியை பதிவு செய்திருந்தன.

நாட்டின் கடன் கட்டமைப்பு என்பது உறுதியற்ற நாணயக் கொள்கை காரணமாக பாதிக்கப்பட்டிருந்தன. இதில் பாரியளவில் பணம் அச்சிடல் மற்றும் பொருளாதார கட்டுப்பாடுகள் விரிவாக்கம் செய்யப்பட்டிருந்தமை பங்களிப்பு வழங்கியிருந்தன.

இறக்குமதி கட்டுப்பாடுகள், விலைக் கட்டுப்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் போன்றன இதில் தாக்கம் செய்திருந்தன.

டயலொக் வலையமைப்பு

திஹவ கிராமத்தில் விஸ்தரிப்பு

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி தனது 4000 ஆவது தொலைபேசி கோபுரத்தை குருணாகல் மாவட்டத்தின் 'திஹவ'என்ற கிராமத்தில் திறந்து வைத்துள்ளது. அவ்வாறே, இப்பிரதேச மக்களின் வசதிகருதி மேலும் வலையமைப்பு வசதிகளை விரிவுபடுத்தியும் வருகின்றது.

இலங்கை பூராவும் வலையமைப்பு வசதியை விரிவுபடுத்தும் தனது முயற்சிகளுக்கு சமாந்தரமாகவும் தற்போது நாட்டில் நிலவும் கொவிட்-19 பரவல் சூழ்நிலையிலும் பாவனையாளர்களின் தேவைகளை கருத்திற்கொண்டு டயலொக் ஆசிஆட்டா தொலைத்தொடர்பு கோபுர வலையமைப்பில் மேலும் 515 கோபுரங்களை இணைத்து இவ்வாறு 4000 ஆவது கைபேசி 4G கோபுரத்தை நிறுவுவதற்கு டயலொக் நிறுவனத்திற்கு முடிந்துள்ளதுடன், இது இலங்கையின் அதிக எண்ணிக்கையிலான தொலைத்தொடர்பு கோபுரங்களைக் கொண்ட வலையமைப்பாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தூரப்பிரதேச கிராமங்களில் வசிக்கும் சமூகத்தினரின் தேவைகளை கருத்திற்கொண்டு தனது வலையமைப்பை விரிவுபடுத்துவதுடன் நகர்ப்புறங்களிலும் அவசர கொள்திறன் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் ஏதுவான வகையில் 'டயலொக்' இனால் Lamp Pole போன்ற அதிதிறன்கூடிய தொழில்நுட்ப வழிமுறைகளும் கையாளப்பட்டு வருகின்றன.

இத்தோடு இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 'கிராமத்திற்கு தொலைத்தொடர்பு வசதி' எனும் திட்டத்துடன் இணைந்தவாறு எதிர்வரும் ஆறு மாதங்களுள் மேலும் 450 தொட்ர்பு கோபுரங்களை தனது பாரிய தொடர்பு கோபுர வலையமைப்புடன் புதிதாக இணைப்பதுடன் நடப்பு 2021ஆம் வருட இறுதியின் போது இந்நாட்டின் சனத்தொகையில் 95% ஆனோரை 4G மூலம் பிணைத்திட முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதைய 'கொவிட்-19' சூழ்நிலையின் கீழ் டயலொக் வலையமைப்பிடம் மேற்கொள்ளப்பட்ட 100% ஆக அதிகரித்த 'டேட்டா' தேவைகள் மற்றும் 200% ஆக அதிகரித்த 'நிலையான டேட்டா' தேவைகள் ஆகியனவற்றை வழங்குவதற்கு டயலொக் தொலைத்தொடர்பு வலையமைப்பிற்கு சாத்தியப்பட்டதுடன் இந்நாட்டின் கைபேசி 'டேட்டா' பாவனையில் 60% ஐ டயலொக் நிறுவனமே வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. பாரிய அளவில் அதிகரித்துச்செல்கின்ற இந்த கேள்விகளை (கோரிக்கைகள்) நிறைவேற்றும் நோக்கில் புதிய தொடர்பு கோபுரங்களை அமைப்பதற்கு மேலதிகமாக ஏற்கனவே அமைக்கப்பட்ட டயலொக் தொடர்பு கோபுரங்களின் கொள்திறனை அதிகரிப்பதிலும் 'டயலொக்' நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதற்கமைய, தற்போதைய 'கொவிட்-19' பரவல் சூழ்நிலையின் கீழ் 2,831 கைபேசி 4G தொடர்பு கோபுரங்கள் மற்றும் 1816 நிலையான 'புரோட்பான்ட் தொடர்பு கோபுரங்கள் ஆகியவற்றின் வலையமைப்பை அவ்வாறே அதிகரிப்பதிலும் டயலொக் நிறுவனம் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்த வருட இறுதியின் போது தனது கோபுர வலையமைப்புகளுள் 75% ஆன கோபுரங்களின் கொள்திறனை இவ்வாறே அதிகரிப்பதற்கு 'டயலொக்' ஏற்பாடுகளை செய்துள்ளது.

இதுவரையில், 2.8 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டைக் கொண்ட நாட்டின் மிகப்பெரிய நேரடி வெளிநாட்டு முதலீட்டாளராக செயற்படுகின்ற டயலொக், இவ்வாறு அடிப்படை தேவைகளை மேம்படுத்தும் நோக்கில் 2021ஆம் வருடத்திற்காக மாத்திரம் 207 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை முதலீடு செய்வதற்கு திட்டமிட்டுள்ளது.

டிஜிட்டல் இடைவெளியை நிவர்த்தி செய்யும் முயற்சிகளுக்கு

SLT–MOBITEL பங்களிப்பு

இலங்கையில் டிஜிட்டல் இடைவெளியை நிவர்த்தி செய்யும் பணிகளில் பங்களிப்பு வழங்கும் வகையில், SLT-MOBITEL, இலங்கை தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) கமட்ட சன்னிவேதனய திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட பனான, வெலிகேபொல பிரதேசத்தில் முதலாவது 4G கோபுரத்தை நிறுவியிருந்தது. இந்நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இலங்கை தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) பணிப்பாளர் நாயகம் ஓஷத சேனாநாயக்க, SLT-MOBITEL குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரத்ன, Mobitel (Pvt.) Ltd. இடைக்கால பிரதம நிறைவேற்று அதிகாரி சந்திக விதாரண, SLT-MOBITEL இன் சிரேஷ்ட நிர்வாக அங்கத்தவர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் இதர விருந்தினர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கமட்ட சன்னிவேதனய திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட முதலாவது 4G கோபுரமாக இது அமைந்திருப்பதுடன், சப்ரகமுவ மாகாணத்தின் இணைப்புத்திறனை மேலும் மேம்படுத்துவதாக இந்த 4G LTE கோபுரம் அமைந்திருக்கும். தனியார் மற்றும் அரச துறைகளின் உட்கட்டமைப்பு தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில், இலங்கை தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் SLT-MOBITEL கைகோர்த்து, நாட்டில் 100 சதவீதம் 4G LTE வலையமைப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்தை நிறைவேற்றும் பணிகளை முன்னெடுத்த வண்ணமுள்ளது. இதனூடாக பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த சமூகங்கள் எதிர்நோக்கும் இணைப்புத்திறன் சார்ந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணக்கூடியதாக இருக்கும். இந்தத் திட்டத்துக்கு SLT-MOBITEL இன் ஆதரவு என்பது, டிஜிட்டல் புரட்சியை நோக்கிய தேசத்தின் பயணத்துக்கு உதவியாக அமைந்திருக்கும்.

சென்னை

விஜயகாந்த் வீட்டில் முதலமைச்சர்

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நேற்றைய தினம், தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தை சென்னை விருகம்பாக்கத்திலுள்ள அவரது வீட்டில் வைத்துச் சந்தித்ததோடு, அவரது உடல் நலம் குறித்து விசாரித்தார்.

இதன் போது கொரோனா பேரிடர் நிவாரண நிதியாக இந்திய மதிப்பில் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சரிடம் விஜயகாந்த வழங்கினார்.

இச்சந்திப்பில் மு.க.ஸ்டாலினுடன் அமைச்சர் துரைமுருகன், எம்பி ஆ.ராசா உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

கடந்த லோக்சபா தேர்தலின் போது இருவரது கட்சிகளுக்கு இடையிலும் சில கசப்பான சம்பவங்கள் நடந்த நிலையில், முதலமைச்சரின் இச் சந்திப்பு அதை சரி செய்யும் வகையில் இருந்ததாகத் தமிழக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

செங்கல்பட்டு

கிழிந்த தாள்களுக்கு மாதமொரு பிரயாணி

செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூர் அருகேயுள்ள சோத்துப்பாக்கத்தில் இயங்கிவரும் ஆம்பூர் பிரியாணிக் கடையில், பொதுமக்களிடம் உள்ள பழைய கிழிந்த ரூபாய் நோட்டுகளுக்கு பிரியாணி விற்கப்படும் எனக் கடை நிர்வாகம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் குறித்த பிரியாணிக் கடையில் பழைய கிழிந்த நாணயத்தாள்களைக் கொடுத்து மக்கள் பிரியாணி வாங்கிச் செல்லக் குவிந்துள்ளனர்.

பயன்படுத்த முடியாத கிழிந்த நாணயத்தாள்களைக் வெளிக் கொண்டு வரவேண்டும் என்கின்ற நோக்கத்திலேயே இவ்வறிவிப்பு செய்யப்பட்டிருந்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மக்களிடம் உள்ள ஆர்வத்தைக் கண்ட கடை உரிமையாளர் மாதம் ஒருமுறை இதுபோன்று பிரியாணி விற்பனை செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

'35 சதவீத புலிகள் வெளியே உலாவுகின்றன'

இந்தியாவில் 35 சதவீதம் புலிகள் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளுக்கு வெளியே வசிப்பதாக, ஐ.நாவின் சுற்றுச்சூழல்அமைப்பும், சர்வதேச வனநிதியமும் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

மேலும் புலிகள் தமது உணவுத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே மனிதர்கள் வாழும் பிரதேசங்களுக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் அதிகரித்து வரும் மக்கள் தொகையால் நிலம் மற்றும் இயற்கை வளங்களுக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் வனப்பகுதிகள் துண்டாடப்படுவதாகவும், இதனால் மனிதனுக்கும், விலங்குகளுக்கும் இடையேயான மோதல் அதிகமாக நடப்பதாகவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விண்வெளிப்பயணத்தில்

மேலுமொரு இந்தியப் பெண் இணைவு

விர்ஜின் கேலடிக் என்பது அமெரிக்க தனியார் விண்வெளி நிறுவனமாகும், இந்நிறுவனத்தின் சோதனை முயற்சியின் ஒரு பகுதியாக நேற்றைய தினம் தனது விண்கலமான யூனிட்டி 22-ஐ அறிமுகப்படுத்தியது.

இதன்மூலம் நிறுவனத்தின் தலைவரான ரிச்சர்ட் பிரான்சன் உள்ளிட்ட 5 பேர் கொண்ட குழு நேற்றைய தினம் (11) விண்வெளிப் பயணம் மேற்கொண்டது.

இப்பயணத்தில் இந்தியப் பெண்ணான ஸிரீஷா பாண்ட்லா என்பவர் இணைந்துள்ளார்.

புதுடெல்லி

ஒலி எழுப்பினால் ரூ.1 இலட்சம் அபராதம்

'புதுடெல்லியில் அதிக ஒலி எழுப்பினால் ஒரு லட்சம் ரூபாய் வரை அபாராதம் விதிக்கப்படும்' என மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

மேலும் பாடசாலைகள், கல்லூரிகள், நீதிமன்றங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றிலிருந்து 100 மீற்றர் வரையுள்ள பகுதிகளை, அமைதி மண்டலமாகவும் அறிவித்துள்ளது.

அப் பகுதிகளில் பட்டாசு வெடித்தால், 20 ஆயிரம் ரூபாயும், மற்ற இடங்களில் பட்டாசு வெடித்தால் 10 ஆயிரம் ரூபாயும் அபராதமாக விதிக்கப்படுமெனக் கூறப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசம்

இரண்டுக்கு மேல் பெற்றால் அரச வேலைக்கு ஆப்பு

இந்தியாவின் பரப்பளவில், நான்காவது பெரிய மாநிலமான உத்தர பிரதேசம், மக்கள் தொகையில் முதலிடத்தில் உள்ளது.

இந்நிலையில் மக்கட் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில், உத்தர பிரதேசத்தில் புதிய சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

'இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றால், அரசு வேலைக்கு விண்ணப்பிக்க முடியாது எனவும், அரசு சலுகைகள் இரத்து செய்யப்படும் எனவும், தேர்தலில் போட்டியிட முடியாது' எனவும் குறித்த சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் இரண்டுக்கு உட்பட்ட குழந்தை மட்டுமே உள்ளவர்களுக்கு வட்டியில்லாக் கடன், குடிநீர், மின்சாரம், வீட்டு வரிகளில் தள்ளுபடி, காப்பீடு உள்ளிட்ட பல சலுகைகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது, இந்நிலையில் இப் புதிய சட்டத்திற்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். குறிப்பாக விவாகரத்துப் பெற்றோர், விதவையர் போன்றவர்கள் குறித்து இம் மசோதாவில்

நாக்பூர்

ஒரு தசாப்தத்துக்குப் பின் ஒன்றுசேர்த்த ஆதார்

10ஆண்டுகளுக்கு முன்னர் காணாமற் போன மனநலம் பாதித்த சிறுவனொருவனை அவனது குடும்பத்துடன் இணைப்பதற்கு ஆதார் அட்டை பெரிதும் துணையாக இருந்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

மராட்டிய மாநிலம் நாக்பூர் ரயில் நிலையத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் மனநலம் பாதிக்கப்பட்ட 8 வயதுச் சிறுவனை பொலிஸார் மீட்டு, காப்பகம் ஒன்றில் ஒப்படைத்தனர்.

அந்தக் காப்பகம் கடந்த 2015 ஆம் ஆண்டு மூடப்பட்ட போதிலும், அச்சிறுவனைத் தொடர்ந்து அக்காப்பகத்தின் நிர்வாகி சமர்த் டாம்லே தனது மகனைப்போல் பராமரித்து வந்துள்ளார்.

அவனுக்கு தற்போது 18 வயது ஆன நிலையில் ஆதார் அட்டை

வெனிசுவேலா

‘பொலிஸார், குழு மோதலில் 26 பேர் பலி’



பொலிஸாருக்கும், வெனிசுவேலாத் தலைநகர் கராகஸின் வடமேற்காகவுள்ள குழு ஒன்றுக்கும் இடையிலான கடந்த வார மோதல்களில், குறைந்தது 26 பேர் கொல்லப்பட்டதாகவும், 38 பேர் காயமடைந்ததாகவும், அந்நாட்டு உள்நாட்டமைச்சர் கார்மென் மெலென்டஸ் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்டவர்களுள் நான்கு அதிகாரிகளும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

சில நாள்களாக இடம்பெற்ற கடும் துப்பாக்கிச் சண்டையை அடுத்தே குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

எதியோப்பியா

வென்ற பிரதமர் அபியின் கட்சி

எதியோப்பியாவின் பாராளுமன்றத் தேர்தலில், உத்தியோகபூர்வ முடிவுகளின்படி அந்நாட்டின் ஆளும் கட்சியான செழுமைக் கட்சி பெரும்பான்மையான ஆசனங்களை வென்றுள்ளது.

அந்தவகையில், அந்நாட்டுப் பிரதமர் அபி அஹ்மட்டின் இரண்டாவது ஐந்தாண்டு பதவிக் காலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எதியோப்பியாவின் 10 பிராந்தியங்களில் மூன்றில் வாக்களிப்பு இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில், எதியோப்பிய தேசிய தேர்தல் சபையால் வெளியிடப்பட்ட முடிவுகளின்படி, 436 ஆசனங்களைக் கொண்ட மத்திய பாராளுமன்றத்தில் 410 ஆசனங்களை பிரதமர் அபியின் கட்சி வென்றுள்ளது.

வன்முறை வெடிப்பு

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் ஸூமா சிறையிலடைக்கப்பட்டமைக்கு எதிரான வன்முறை ஆர்ப்பாட்டங்களில் 28 பேர் கைது செய்யப்பட்டதோடு, நாட்டின் பிரதான நெடுஞ்சாலைகளில் ஒன்று மூடப்பட்டுள்ளது.

ரஷ்யா

தடுப்பூசியேற்றியவர்கள்

‘உடலுறவு கொள்ளக் கூடாது’



ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவிலிருந்து 1,000 கிலோ மீற்றருக்குள் உள்ள பிராந்தியம் ஒன்றின் சுகாதார அமைச்சானது, கொரோனாவுக்கு எதிராக தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்கள் உடலுறவு கொள்ளக் கூடாது எனப் பரிந்துரைத்துள்ளது.

இந்நிலையில், எவ்வளவு காலத்துக்கு உடலுறவு கொள்ளக் கூடாது என சரடோவ் எனப்படும் குறித்த பிராந்தியத்தின் பிரதி சுகாதார அமைச்சர் டெனிஸ் கிரேஃபர் தெரிவித்திருக்கவில்லை.

இதேவேளை, மூன்று நாள்களுக்கு அல்கஹோலை உள்ளெடுக்க கூடாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொலம்பியா

‘ஹெய்ட்டியில் கொல்லப்பட்ட படைவீரர் மெய்ப்பாதுகாவலர்’



ஹெய்ட்டி பொலிஸாருடனான துப்பாக்கி மோதல் ஒன்றில் கொல்லப்பட்ட கொலம்பியாவின் முன்னாள் படைவீரர், மெய்ப்பாதுகாவலராக பணிக்கமர்த்தப்பட்டதாக அவரது சகோதரி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

ஹெய்ட்டி ஜனாதிபதி ஜொவெனெல் மொய்ஸேயின் கொலையில் பங்கெடுத்ததாக குறித்த படைவீரர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி மொய்ஸே, 26 கொலம்பியர்கள், இரண்டு ஹெய்ட்டி ஐ. அமெரிக்கர்கள் உள்ளடங்கலான பயிற்றுவிக்கப்பட்ட வெளிநாட்டுக் கொலையாளிகளால் கொல்லப்பட்டதாக ஹெய்ட்டி அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதில், 17 பேர் கைப்பற்றப்பட்டதுடன், மூவர் கொல்லப்பட்டதோடு, எண்மரை இன்னும் தேடுவதாக ஹெய்ட்டி பொலிஸார் கூறியிருந்தனர்.

இதேவேளை, தன்னுடனான இறுதிக் கலந்துரையாடலில், எதிர்பாராதவிதமாக தாங்கள் காக்க வேண்டிய நபரிடம் அங்கு மிகவும் தாமதமாகச் சென்றதாக படைவீரர் தெரிவித்ததாக அவரின் சகோதரி கூறியுள்ளார்.

சிரியா

ஐ. அமெரிக்க படைகள் மீதான தாக்குதல்:

‘காயம், சேதமில்லை’

கிழக்கு சிரியாவிலுள்ள ஐக்கிய அமெரிக்க படைகள் நேற்று முன்தினம் மறைமுகமான தாக்குதல்களை எதிர்கொண்டுள்ளன.

எனினும், ஆரம்ப கட்ட அறிக்கைகளின்படி எந்தவொரு உயிரிழப்புகளோ அல்லது சேதமோ ஏற்படவில்லை என ஐ. அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தன்னை அடையாளங் காட்டாமல் கருத்துத் தெரிவித்த குறித்த அதிகாரி, சிரியாவின் கொனொக்கோவில் தாக்குதல் இடம்பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கோப்பா அமெரிக்கா தொடர்:

பிரேஸிலை வீழ்த்தி சம்பியனான ஆர்ஜென்டீனா

கோப்பா அமெரிக்கா தொடரில் ஆர்ஜென்டீனா சம்பியனானது.

பிரேஸிலில் நடைபெற்று வந்த இத்தொடரில், நேற்றுக் காலை நடைபெற்ற பிரேஸிலுடனான இறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே ஆர்ஜென்டீனா சம்பியனாகியிருந்தது.

ஆர்ஜென்டீனாவின் மத்தியகளவீரர் றொட்றிகோ டீ போல் முன்னோக்கி அனுப்பிய பந்தை பிரேஸிலின் பின்களவீரர் றெனான் லொன்டி இடைமறிக்கத் தவறிய நிலையில், அதைப் பெற்றுக் கொண்ட ஆர்ஜென்டீனாவின் இன்னொரு மத்தியகளவீரரான ஏஞ்சல் டி மரியா, பிரேஸிலின் கோல் காப்பாளர் எடெர்சனைத் தாண்டியே குறித்த கோலைப் பெற்றிருந்தார்.

அந்தவகையில், இவ்வெற்றி மூலம் தனது 15 ஆண்டுகால விளையாடும் காலத்தில், ஆர்ஜென்டீனாவுடன் முதலாவது தொடரில் 34 வயதான லியனல் மெஸ்ஸி சம்பியனாகியுள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான

தொடரைக் கைப்பற்றிய இங்கிலாந்து

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இங்கிலாந்து கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்றிருந்த இங்கிலாந்து, லோர்ட்ஸில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியுள்ளது.

மழை காரணமாக 47 ஓவர்கள் கொண்டதாகவே இப்போட்டி இடம்பெற்றிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

இங்கிலாந்து: 247/10 (45.2 ஓவ.) (பில் சோல்ட் 60 (54), ஜேம்ஸ் வின்ஸ் 56 (52), லூயிஸ் கிரேகரி 40 (47), பிறைடன் கார்ஸே 31 (41) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹஸன் அலி 5/51, ஹரிஸ் றாஃப் 2/54, சௌட் ஷகீல் 1/14, ஷடாப் கான் 1/46, ஷகீன் ஷா அஃப்ரிடி 1/37)

பாகிஸ்தான்: 195/10 (41 ஓவ.) (துடுப்பாட்டம்: சௌட் ஷகீல் 56 (77), ஹஸன் அலி 31 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: லூயிஸ் கிரேகரி 3/44, சஃஹிப் மஹ்மூட் 2/21, கிரேய்க் ஒவெர்ட்டன் 2/39, மற் பார்க்கின்ஸன் 2/42, பிறைடன் கார்ஸே 1/44)

போட்டியின் நாயகன்: லூயிஸ் கிரேகரி

இந்தியத் தொடருக்கான

இலங்கையின் மாற்றுக் குழாம் வீரருக்கு கொரோனா

இந்தியத் தொடருக்கான முன்னேற்பாடு ஒன்றாக கொழும்பில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த குழாலிருந்த இலங்கை வீரர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

இத்தொடருக்கான முதற் தெரிவுக் குழாமானது ஏற்கெனவே துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளர் கிரான்ட் பிளவர், ஆய்வாளர் ஜி.டி. நிரோஷன் கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் பாதுக்காப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பிலும், தம்புள்ளையிலும் இரண்டு வெவ்வேறு குழாம்கள் பயிற்சி பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மீண்டும் பிற்போடப்பட்டுள்ள இத்தொடரானது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விம்பிள்டன்: சம்பியனான பார்டி

பிரித்தானியாவின் தலைநகர் இலண்டனில் நடைபெற்று வந்த விம்பிள்டன் டென்னிஸ் தொடரில், உலகின் முதல்நிலை வீரரான அஷ்லெய் பார்ட்டி சம்பியனானார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தனது இறுதிப் போட்டியில், செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவாவை எதிர்கொண்ட அவுஸ்திரேலியாவின் பார்டி, 6-3, 6-7 (4-7), 6-3 என்ற செட் கணக்கில் வென்று சம்பியனாகியிருந்தார்.

மீண்டும் அவுஸ்திரேலியாவை வென்ற மே. தீவுகள்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியையும் மேற்கிந்தியத் தீவுகள் வென்றுள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்றிருந்த மேற்கிந்தியத் தீவுகள், சென். லூசியாவில் நேற்றுக் காலை நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்து 2-0 என மேற்கிந்தியத் தீவுகள் முன்னிலை பெற்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

மேற்கிந்தியத் தீவுகள்: 196/4 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஷிம்ரோன் ஹெட்மயர் 61 (36), டுவைன் பிராவோ ஆ.இ 47 (34), லென்டில் சிமொன்ஸ் 30 (21), அன்ட்ரே ரஸல் ஆ.இ 24 (08) ஓட்டங்கள். பந்துவீச்சு: அஸ்தன் அகர் 1/28 [4])

அவுஸ்திரேலியா: 140/10 (19.2 ஓவ.) (துடுப்பாட்டம்: மிற்செல் மார்ஷ் 54 (42) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹெய்டன் வோல்ஷ் ஜூனியர் 3/29 [4], ஷெல்டன் கோட்ரல் 2/22 [3], கிறிஸ் கெய்ல் 1/1 [0.2], பிடல் எட்வேர்ட்ஸ் 1/8 [1.5], அன்ட்ரே ரஸல் 1/22 [3])

போட்டியின் நாயகன்: ஷிம்ரோன் ஹெட்மயர்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 12 ஜூலை 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.